1087

# சந்திரோதயம்

1087
THE REGISTRAR OF ...
16 FEB 1940



'பக்தி'யில் ஸ்ரீமதி லக்ஷ்மிபாய்

SCANNED

# "CHANDROTHAYAM"

15th Feb' 1940. விலை அணா 0—1—6


சமூகத்தின் மூடப் பழக்க வழக்கங்களைச் சில சீர்
திருத்தவாதிகள் எதிர்க்கின்றனர். சிலர் அக்கட்டுப்பாடு
களைத் தகர்க்க உயிரைத் தியாகமும் செய்கின்றனர். வஞ்
சனை, பொய்ஆசாரம், கபடம், ஏமாற்று இவைகளின்
மறைவில் சனாதனிகள் செய்யும் கொடுமைகளை நவ யுவ
யுவதிகள் தகர்த்தெரிந்து சமூகத்தைப் புனருத்தாரணம்
செய்கின்றனர். இந்த அற்புத அனுபவங்களைத்தான்
வாகினியின் தெலுங்கு 'சுமங்கலி' சித்தரிக்கிறாள்.
VAUHINI PICTURE
சுமங்கலி
a B.N. REDDI - RAMNOTH - SEKAR production
FOR BOOKINGS APPLY TO....
THE VAUHINI PICTURES LTD.
43 ACHARAPPAN STREET MADRAS
STUDIO NEWTONE
NOW READY FOR BOOKING
VANDE MATARAM
THE TOP SCORER OF 1939
SEKAR

# சந்திரோதயம்

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" —குறள்

துணை ஆசிரியர் : ஜி. ஆர். நாதன்

| ஆரம். 4 | சென்னை<br>1940ஸ்ரீ ஏப்ரல்மீ 1உ | முத்து. 24 |
| --- | --- | --- |

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| ஒன்றே ஒன்று | — | ... | 2 |
| சுற்றுப் புறம் | — | ... | 8 |
| என் டயரி | — | "நாதன்" | 11 |
| பாமினி | — | கே. கமலாம்பாள் | 17 |
| கலியாணம் | — | "கேசி" | 20 |
| என் இச்சை | — | கே. எஸ். ஜி. | 22 |
| மேல்வரும்படி | — | டி. ஆர். பந்துலு. | 25 |
| வியாபார தந்திரம் | — | கோமதி நாயகம் | 28 |
| கிழவர் கதை | — | "மாயாவி" | 30 |
| நாயும் பூனையும் | — | "மூர்த்தி" | 33 |
| சினிமா வம்பு | — | "தேனீ" | 35 |
| ஆரோக்ய அரங்கம் | — | எஸ். நடராஜன். | 39 |
| புத்தகப் பார்வை | — | ... | 40 |


குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

# ஒன்றே ஒன்று

வெகு அவசரத்துடன் உள்ளே வந்த ஸ்ரீமான் பொது ஜனம் "நான் யார் பேச்சைக் கேட்டு நடப்பது சார்?" என்று தடுமாறிக் கொண்டு கேட்டார். "என்ன ஸ்வாமி! யார் பேச்சை எதற்காக எங்கே கேட்க வேண்டும்? விபரமாய்ச் சொல்லுங்கள்; விடையளிக்கிறோம்" என்றோம் நாம்.

பொதுஜன ஸ்வாமி நாற்காலியில் அமர்ந்து சிறிது ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு ஆரம்பித்தார்.

"வந்து-அதிலே-ஒரு விஷயம் பாருங்கோ-என்ன அர்த்தமாச்சா?........."

"ஓ! வந்து-அதிலே-ஒரு விஷயம் அர்த்த மாச்சு; மேலே சொல்லுங்கள்!" என்றோம்.

"வந்து-எனக்கு ரொம்ப நாட்களாக பூரண சுயராஜ்யத்தின் மேல் ஆசை. அதை அடைய வேண்டு மென்று இப்பொழுது முயற்சி செய்யப் போகிறேன். பலபேர் பல வழிகளையும், யோசனைகளையும் சொல்லுகிறார்கள். நான் யார் பேச்சைக் கேட்பது?........"

"நீங்கள் யார் பேச்சையும் கேட்கவேண்டாம், அப்படிக் கேட்டால் உங்களுக்குத் தொல்லைகள்தான் வந்து சேரும். ஒரு வண்ணான் பலபேரின் சொற்படியெல்லாம் நடந்து, கடைசியில் தன் கழுதையைச் சுமந்து ஆற்றிலே போட்டானே, அந்தக் கதை உங்களுக்குத் தெரியுமல்லவா! அப்படியிருக்கப் பல பேரின் யோசனையைக் கேட்கலாமா? அது சரி; உங்களுக்கு அப்படி யோசனை சொல்லும் பலபேர் யார்?......"

"யார் சொல்லுவார்கள்? எல்லாம் எனது சகோதரர்களும் அவர்களுடைய கட்சிகளுந்தான். ஒருவர் 'நமக்குப் பூரண சுயராஜ்யமே கூடாது, வெள்ளையர்கள் சம்பந்தமின்றி நாம் ஒருக்காலும் வாழ முடியாது..." என்று அடிமையையே ஸ்தாபிதம் செய்கிறார்.

"சுதேச ராஜாக்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'அப்பா! காலில் விலங்கு இருக்கிற தென்று என் வருத்தப் படுகிறாய்? தங்க நகையில்லாத கால்களுக்கு ஒரு இரும்பு நகை கூட வேண்டாமா? ஆங்கிலேயரின் சிறையிலிருந்து நீ வெளிப்

பட்டால் மற்ற தேசத்தார்கள் உன்னை விழுங்கி விடுவார்கள். மேலும் உனக்கு ராணுவம் முதலிய படைபலம் இருந்தாலல்லவா நீ பூரண சுயராஜ்யத்தை வைத்திருக்க முடியும்!' என்கின்றனர்.

"முன்னணிக் கக்ஷி என்று கூறிக் கொண்டு ஒருவர் யோசனை கூற வந்திருக்கிறார். அவர் சொல்வது ரொம்ப விநோதமாயிருக்கிறது. நான் முன்னுக்குப் போக ஆரம்பித்தால், அவர் பத்துமைல் பின்னால் இருந்து கொண்டு 'ஓ! உனக்கு முன்னுக்குப் போகத் தெரியவில்லை. ரொம்பத் தீவிரமாய் ஓட வேண்டுமாக்கும்' என்று கூச்சல் போடுகிறார். ஆசாமி எங்கே என்று திரும்பிப் பார்த்தால் இன்னும் பத்து மைல் பின்னால் சென்று கொண்டிருப்பது தெரிகிறது.

"இது தான் போகிறதென்றால் இன்னொரு சகோதரர் 'நீ சுயராஜ்யம் வாங்க வேண்டாம்; எங்களுக்கு நாங்களே பிரதிநிதிகள். எங்கள் தேவைகளை நாங்களே பூர்த்தி செய்து கொள்ளுகிறோம்' என்கிறார்.

"அப்புறம் சனாதனத்தைக் கடைப்பிடிப்பவரோ, 'ஓ! நீ சுயராஜ்யம் வாங்கி பழமையை அழிக்கப் பார்க்கிறாயா? அது முடியாது; நாங்கள் பழையபடி வேற்றுமையாய்த்தான் இருப்போம்' என்று கர்ஜித்து சாபம் கொடுக்க வருகிறார்.

"இன்னொரு மரியாதைக் கக்ஷி நான் சுயராஜ்யத்தை நோக்கி நடக்கும் பாதையில் முள்ளையோ, கல்லையோ கொண்டு வந்து முட்டுக் கட்டை போடுகிறது.

"என்ன ஆசிரியர்வாள்! இப்படியெல்லாம் செய்தால் நான் எப்படித்தான் சுயராஜ்யம் வாங்குவது நான் யார் பேச்சைத்தான் கேட்டு நடப்பது?..." என்று அழாத குறையாகச் சொன்னார் பொதுஜனம்.

"ஐயா பொது ஜன ஸ்வாமி! வருத்தப்பட வேண்டாம்! உங்களுக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டுவது வாஸ்தவமானால், நீங்கள் யார் பேச்சையும் கேட்கக் கூடாது. தன் கையே தனக்கு உதவி என்று கேட்டதில்லையா?

"உங்களுக்கு யோசனை சொல்பவர்கள், உப்பென்றும், சீனியென்றும் உள் நாட்டுச் சேலையென்றும் செப்பித் திரிவார்கள். ஆனால், செய்வதறியாதவர்கள். பழமை பழமையென்று பாவனை செய்வதன்றிப் பழமையிருந்த நிலை தெரியாதவர்கள். தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தவிர்க்காமல், வாயைத் திறந்து வந்தே மாதரமென்பவர்கள். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தையிரங்காதவர்கள். நெஞ்சிலுறமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்பவர்கள்......" என்று சொல்லிக் கொண்டு போனேன்.

"அதெல்லாம் தெரியும் ஸார்! நான் யார் பேச்சைக் கேட்டு நடப்பது என்று மட்டும் கூறுங்கள்!" என்று சிறிது ஆத்திரத்துடன் அவர் கேட்டார்.

"என்ன ஸ்வாமி, அதற்குள் கோபித்துக் கொள்கிறீர்கள்? நாம் தான் ஒருவர் பேச்சையும் கேட்கக் கூடாது என்று சொன்னேமே!......"

"அப்படியானால் எனக்கு சுயராஜ்யம் கூடாதென்பது உமது எண்ணமோ?........."

"கிடையவே கிடையாது. என் கவலைப் படுகிறீர்கள்? உங்களுக்கு சுயேச்சை வேண்டுமானால் நம்ம காங்கிரஸ் பேச்சைத்தான் கேட்டுப் பாருங்களேன்?........"

"என்ன ஸார்! சற்று முன்புதான் ஒருவர் பேச்சையும் கேட்கப்படாது என்று சொன்னீர்கள்! அதற்குள்........."

"சொன்னது வாஸ்தவந்தான். ஆனால், காங்கிரஸ் வேறு நீங்கள் வேறு அல்லவே! உங்கள் பிரதிநிதிதானே காங்கிரஸ்! உங்கள் வாக்கால்தானே, அது அரசாட்சி செய்தது? பின்பு மந்திரி பதவிகளையும் உமதிஷ்டப்படிதானே ராஜிநாமா செய்தது! 53 வருடங்களாக உங்கள் சொற்படிதானே கேட்டு வந்திருக்கிறது.

"உங்கள் பொருட்டுத்தானே சார் அது பல தியாகங்களைச் செய்திருக்கிறது; ஜெயிலுக்குப் போயிருக்கிறது; தடியடி வாங்கியிருக்கிறது! இன்றைக்கும் உங்கள் நலத்துக்குத்தானே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறது!

"பார்க்கப் போனால் உங்கள் உடம்புகள் மட்டும் இரண்டேயொழிய, ஹிருதயம் எல்லாம் ஒன்றுயல்லவா இருக்கிறது!

"ஆகவே காங்கிரஸும் நீங்களும் இவ்வளவு ஏகீக பாவத்துடன் இருக்கையில் அதன் சொற்படி கேட்பதில் என்ன சந்தேகம்? மேலும் சிவபெருமானைச் சுற்றிவந்து கணபதி உலகத்தையே சுற்றியமாதிரி ஆயிற்று என்று பழத்தைப் பெற்றுக் கொண்டாரல்லவா!

"அந்த மாதிரி காங்கிரஸின் பேச்சைக் கேட்பது, உங்கள் பேச்சைக் கேட்பது போல் ஏன் ஆகாது? சிவனைச் சுற்றிவந்த கணபதிக்குப் பழம் கிடைத்த மாதிரி உமக்கும் காங்கிரஸ் பேச்சைக் கேட்பதால் ஏன் சுயராஜ்யம் வராது! ஆகவே, இன்றைக்கே காங்கிரஸின் பேச்சைக் கேட்டு......"

"ரொம்ப சரி; காங்கிரஸ் என்ன சொல்கிறது? அதையும் சொல்லி விடுங்கள்" என்றார் அவர்.

"சொல்வதை நன்கு கேளுங்கள்! உங்கள் நன்மைக்காகத்தான் சமீபத்தில் ராம்காரில் 53 வது காங்கிரஸ் கூடிற்று. அதில் எவ்வளவோ தீர்மானங்கள் நிறைவேற்றுவதாகத்தான் இருந்தார்கள். ஆனால் திடீரென்று மழை கொட்டு கொட்டென்று கொட்ட ஆரம்பித்து விட்டது.

"இதனால் மிக முக்கியமான ஒரே ஒரு தீர்மானத்தை மட்டும் காங்கிரஸ் நிறைவேற்ற வேண்டியதாய்ப் போயிற்று. ஆனால் அதுகூட உங்கள் நன்மைக்காகத்தான் மழைபெய்தது, என்று நினைக்கிறோம். மழை இல்லாதிருந்தால் சாவதானமாகப் பல தீர்மானங்கள் வந்திருக்கும். இந்த நெருக்கடியான சமயத்தில் அவ்வளவு தீர்மானங்களையும் காரியத்தில் நடத்திக்காட்டுவது உங்களுக்கு சிறிது அசௌகர்யமாயிருக்கும். இப்பொழுது அப்படியெல்லாம் இல்லை. நாடு இருக்கிற நிலைமைக்கும், உலகம் போகிற போக்கிற்கும், நீங்கள் இருக்கும் நிலைமைக்கும் தகுந்தபடியான ஒரே ஒரு அதுவும் தலைசிறந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"ஆகவே இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் அந்தத் தீர்மானத்தின்படி, குறுக்கே நெடுக்கே ஒன்றும் போகாமல் நடக்க வேண்டியது தான்........."

"ரொம்ப சந்தோஷம். நான் அதன்படி நடக்கத் தயார்தான். ஆனால் அந்த ராம்கார் காங்கிரஸில் 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று கொண்டுவந்த தீர்மானம் என்ன?" என்று ஆவலுடன் பொதுஜனம் கேட்டார்.

"ஒரு முறை நாம் 'உலகத்திற்கு சூரியன் ஒன்று அதுபோல் இந்தியாவுக்கு மகாத்மா காந்தி ஒருவர்தான் இருக்க முடியும்' என்று எழுதியிருந்தோமல்லவா! இந்தக் கொள்கையைத்தான் ராம்காரும் விஸ்தரிப்புடன் வெளியிட்டிருக்கிறது.

"இந்தியா ஒரே தேசம்; அதில் உள்ளவர்களெல்லாம் ஒரு மனப்பட்டவர்கள். அதன் ஐக்ஷியமும் ஒன்றுதான்; அதன் தலைவரும் ஒருவர்தான். இதுதான் தீர்மானத்தின் தத்துவம்.

"ராம்கார் காங்கிரஸ் மகாத்மாவை தேசத்தின் ஏகதலைவராக நியமித்திருக்கிறது. நமக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டுமானால் வகுப்புப் பிளவுகள், கட்சிப் பிரிவினைகள் முதலியவைகளை விட்டு கட்டுப்பாட்டுடன் அவர் கட்டளையை எதிர் நோக்கித் தயாராய் இருக்க வேண்டும்.

"ராம்காரில் பேசியவர்களெல்லாம் இதைத்தான் வற்புறுத்தியிருக்கின்றனர். ராஷ்டிரபதி ஆஸாத் தன் பிரசங்கத்தில் 'ஒவ்வொரு டொமினியனும் யுத்தத்தில் சேருவதா, வேண்டாமா என்று யோசிப்பதற்கு பிரிட்டன் சந்தர்ப்பம் கொடுத்திருக்கையில் இந்தியாவுக்குமட்டும் ஏன் அந்த சந்தர்ப்பம் கொடுக்க வில்லை? இந்தியாவை அடிமைப் படுத்தி வைக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வளரச் சிறிதும் இடம் கொடுக்க முடியாது.



ஆஸாத்

'ஏகாதிபத்யம் மாண்டு விட்டது என்று அவர்கள் சொல்வது வாஸ்தவமானால், இந்தியாவுக்குத் தானகவே சுதந்திரம் கொடுத்து சரித்திரத்தில் காணாத பெருமையை ஏன் அடையப்படாது?' என்று கேட்டுவிட்டு மைனாரிட்டிகளுக்கும் தகுந்த பதில் கொடுத்திருக்கிறார்.

'ஆயிரம் வருஷங்களாக இந்நாட்டிலே வாழ்ந்து நடை யுடை பாவனைகளிலெல்லாம் கலப்பு ஏற்பட்ட பின் ஒரு மதஸ்தர்கள் தனி சமுதாயமாக எப்படி இருக்க முடியும்? மைனாரிட்டிகளுக்கு காங்கிரஸ், விரும்புகிற பாதுகாப்பளிக்கத் தயாராய் இருக்கையில் ஏன் அவர்கள் குறை கூற வேண்டும்?

'அரசியல் நிர்ணய சபையை விட சிறந்த பாதுகாப்பு மைனாரிட்டிகளுக்கு எது இருக்கிறது? மைனாரிட்டி பிரச்னைகள் குறுக்கே நிருப்பதாய்ச் சொல்லும் பிரிட்டன் மைனாரிட்டி பிரச்னையைத் தீர்க்க சந்தர்ப்பம் கேட்டால், ஏன் மறுத்து வருகிறது?' என்று ராஷ்டிரபதி கேட்டார். பிரிட்டிஷாரின் யுத்தக் கொள்கை, மைனாரிட்டி பிரச்னை ஆகியவைகளைப் பற்றியும் தெளிவுபடப் பிரசங்கித்தார்.

கடைசியில் அவர் 'தேசத்திற்கு காந்தி ஒருவர்தான் தலைவர். தேசத்தின் சுதந்திரம் அவர் கட்டளையில் இருக்கிறது. நாமெல்லோரும் கட்டுப்பாட்டுடன் அவர் தலைமையை ஏற்று அவர் கட்டளைப்படி நடக்க வேண்டும்' என்று வற்புறுத்தினார்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. ராஜென்பாபுவும் 'அன்று பீஹாரில் புத்தர் பிறந்து வளர்ந்து அஹிம்ஸையை போதித்தது போல் இன்று மஹாத்மா வந்துள்ளார். அவர் தலைமையில் நாம் உலகத்துக்கே வழி காட்டுவோம்' என அழுத்தந்திருத்தமாய்ப் பேசினர்.

"இவ்வாறு இவர்கள் கொண்டு வந்த ஏக தீர்மானத்தை காங்கிரஸ் பிரதிநிதிகளும் ஏக மனதாய் நிறைவேற்றி விட்டனர். பிரிட்டன், ஏகாதிபத்யத்துக்காகவே யுத்தம் புரிகிறது. ஆகையால் அது வளர நாம் உதவி செய்ய முடியாது. பூர்ண சுதந்திரந்தான் இந்தியாவுக்கு வேண்டியது; குடியேற்ற நாட்டு அந்தஸ்து அது இது என்பதெல்லாம் இந்தியாவுக்கு ஆகாது. இந்திய அரசியலை நிர்ணயிக்க இந்தியர்கள்தான் தகுதி. ஆகவே அரசியல் நிர்ணய சபை கூட்ட உடனே சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மைனுரிட்டிகளின் உரிமை சமரச ஒப்பந்தத்தின் மூலம் பாதுகாக்கப்படும். சுதந்திரம், ஜனநாயகம், தேசிய ஒற்றுமை இவைகள்தான் அரசியலமைப்பின் அடிப்படையாயிருத்தல் வேண்டும்; தருந்த சந்தர்ப்பத்தில் சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்படும். இதற்குத் தலைவர் மகாத்மாதான். காங்கிரஸ் வாதிகள் யாவரும் கட்டுப்பாட்டுடன் நிர்மாண திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

"இவைதான் தீர்மானத்தின் உட்கருத்து. இத் தீர்மானம் பிரிட்டனுக்குக் கொடுக்கும் கடைசி எச்சரிக்கையாகவும் இருக்கிறது. பிரிட்டன் காங்கிரஸின் சொற்படி கேட்டாலும் கேட்கா விட்டாலும் பொதுஜனமாகிய நீங்கள் காங்கிரஸின் கட்டளையின்படி நடந்துதான் ஆகவேண்டும்.

'என்னை நீங்கள் சேனைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்த பின் என் பேச்சைத்தான் நீங்கள் கேட்க வேண்டும். என் தலைமையில் நீங்கள் அஹிம்ஸா ஆயுதத்தைக் கைப்பிடிக்க வேண்டும். முதலில் நீங்கள் போருக்கு ஆயத்தம் ஆவதற்கு ராட்டையில் நூற்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்து நீங்கள் தயாரானல் அதன் பின் தான் நான் யுத்தம் ஆரம்பிக்க முடியும்...' என்கிறார் மகாத்மாஜி.

"ஆகவே பொதுஜனம் அவர்களே! உங்களுக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டுமானல் யார் பேச்சையும், எந்தக் கட்சியின் முட்டுக் கட்டையையும் கவனியாமல் காங்கிரஸின் தீர்மானத்தின்படி நடக்கச் சித்தமாயிருக்க வேண்டும்.

"பலாத்காரப் போருக்கு மற்றவர்கள் ராணுவப் பயிற்சி செய்வதுபோல் நீங்கள் சாத்மிகப் போருக்கு ராட்டைப் பயிற்சி செய்ய வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் பொதுஜனமாகிய நீங்கள் தயாராகின்றீர்களோ, அவ்வளவு சீக்கிரத்தில் மகாத்மாவின் கட்டளையும் பிறக்கும்-என்ன ஸ்வாமி! நாம் சொன்னதையெல்லாம் கவனித்தீர்களா?" என்று பொது ஜனத்தை நாம் கேட்டோம்.

அவர் "உங்கள் கேள்விக் கெல்லாம் பதில் சொல்ல அவகாசமில்லை; நான் போருக்குத் தயாராக வேண்டும்..." என்று சொல்லிக் கிளம்ப "ஸார், ஸார்! ஒன்றே ஒன்று, ஒரு நிமிஷம்; இப்படி வாருங்கள்..." என்றதற்கு "ஆம்! ராம்கார் தீர்மானித்தது **"ஒன்றே ஒன்றுதான்"** என்று கூறிக் கொண்டே ஓடி மறைந்தார் பொது ஜனம்.

என்று மழியாப் புகழ்பெற்ற "தேவதாஸ்" படத்தில் நடித்த

**சைகால், ஜமுனு நடிக்கும்**

**நியூ தியேட்டர்ஸாரின் வாழ்க்கையை**
**சித்தரிக்கும்**

# ஜிந்தகி

**(வாழ்க்கை)**

இதை டைரக்ட் செய்தது P. C. பருவா என்பதை
மறந்து விடாதீர்கள்

இது அதிசீக்கிரம் மதராஸ் ஸ்டார் டாகீஸுக்கும்
தென்னுட்டின் பட்டணங்களுக்கும் வரும்.

---

நியூ தியேட்டர்ஸாரின் வெளியீடு
பங்கஜ் மல்லிக், மலினு, K. C. டே முதலியோர் நடித்த

## ஆந்தி (பெரும்புயல்)

படத்தையும் எதிர்பாருங்கள்!

## சினிமா பத்திரிகா உலகில்
## ஒரு ஜோதி உதயம்!

பட முதலாளிகள், தியேட்டர்காரர்கள், விநியோகஸ்தர்கள், நடிகர்கள் நலத்துக்காக உழைத்து சினிமாப் பட உலகிற்குத் தொண்டாற்ற ஏப்ரல் 15-ந் தேதி முதல் "**பிலிம் டைஜெஸ்ட்**" என்ற ஆங்கிலப் பத்திரிகை மீண்டும் உதயமாகப் போகிறது. கூடிய விரைவில் ஒரு தமிழ் பத்திரிகையும் ஆரம்பிக்கப்படும்.

**ஸினி பப்ளிஸிடி ஸர்வீஸ்,**

81, பிடாரியார் கோவில் தெரு,

G. T. மதராஸ்.

# சுற்றுப்புறம்

## சவர்க்கார்

சென்ற வாரம் சென்னை கடற்கரையில் ஏராளமான கூட்டத்தில், ஹிந்து மஹா சபைத்தலைவர் ஸ்ரீ. வி. டி. சவர்க்கார் பேசினார்.

ஹிந்து மகா சபையின் லக்ஷியங்களையும், இந்தியாவுக்கு அது எவ்விதத்தில் தொண்டாற்றுமென்பதைப்பற்றியும் தெளிவாய்க் கூறிவிட்டு, லாகூரில் முஸ்லிம் லீக் செய்த தீர்மானத்தை மிக பலமாகக் கண்டித்தார். இந்தியாவை இரண்டாக்கும் ஜின்னாவின் யோசனை தாயைக் கொல்வதற்கு சமம் என்றும் இதற்கு இடம் கொடுக்கப்படாதென்றும் கூறினார்.

## மறைந்தார்

சென்னை மாஜி காங்கிரஸ் மந்திரியும், இந்தியாவுக்கும், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் சென்ற 40 வருஷமாகத் தன் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்தவருமான மௌலானா யாகூப் ஹஸன் சேட் காலமானது இந்தியாவுக்கே பெரிய நஷ்டமாகும். இவருடைய குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியதாகுக.

## தீர்மானம்

'வழியிலே கல்லும், முள்ளும், படுகுழிகளும் இருக்கின்றன. நிதானமாகவும் புத்திசாலித்தனமாகவும் போனால்தான் அவைகளைக் கடந்து சுதந்திர எல்லையை அடையலாம்' என்கிறார் மகாத்மா.

ஆனால் ஸ்ரீ சுபாஷின் கோஷ்டியோ 'அது முடியாது; நாங்கள் துரிதமாகத்தான் செல்வோம். வழியிலே என்ன இருந்தாலும் கவலையில்லை. நாங்கள் அந்தப் படுகுழிகளில் விழத்தான் செய்வோம்' என்கிறார்கள்.

சென்ற மாத இறுதியில் அவர்கள் நடத்திய சமரச எதிர்ப்பு மகாநாட்டில் மகாத்மாவின் கொள்கைகளை எதிர்த்துப் பேசியும், அவரைத் தூஷித்தும் பிரசங்கம் செய்ததோடு, சாத்வீகத்தாலும், ராட்டையாலும், சுயராஜ்யம் வராது என்றும் விளக்ினார்கள்.

இந்தியா யுத்தத்துக்குத் தயார்தானா, தங்கள் கக்ஷியில் எத்தனை பேர் இருக்கின்றனர், என்பதை எல்லாம் யோசிக்காமல் இம்மாதம் 6-ந் தேதி போராட்டத்தை ஆரம்பித்து விடுவதென்று தீர்மானித்திருக்கின்றனர்.

## கம்பன்

கம்பனைத் தெரியாத தமிழர் யாரும் இருக்க முடியாது. தமிழரின் மேன்மைக்கும், நாகரீகத்துக்கும் கம்பரின் ராமாயணம் ஒரு எடுத்துக் காட்டாகும். சென்ற 26-ந் தேதி தமிழ்க்கடல் கம்பன் திருவிழா காரைக்குடியில் நடந்தது. அது சமயம் தமிழ் நாட்டில் பல பெரிய பண்டிதர்களும், அறிஞர்களும் கம்பரின் பெருமைகளைப்பற்றி பிரசங்கங்கள் செய்தனர்.

கம்பனை மறப்பது தமிழை மறப்பது போல்தான். ஆகவே தமிழை மறவாதிருப்பதற்காக கம்பன் திருவிழா நடத்துவது மிகவும் பொருத்தமானதே. இவ்வருடம் இத்திருவிழாவை வெற்றியுடன் நடத்த ஏற்பாடு செய்த ஸ்ரீ சா. கணேசனைவாழ்த்துகிறோம். இதேபோல் வருடா வருடம் தமிழ் நாடெங்கும் கம்பன் திருவிழா நடத்தத் தமிழர்கள் முயன்று. தமிழை வளர்ப்பார்களென நம்புகிறோம்.

## தடையுத்தரவு

**ரா**ணுவமுறையில் கவாத்து செய்யக் கூடாதென்று பாஞ்சால சர்க்கார், காக்சார்களுக்குத் தடையுத்தரவு போட்டிருந்தது. காக்சார்கள் அத்தடையுத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததும், சர்க்கார் அவர்களை அடக்கத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், பலர் கைது செய்யப்பட்டதும், சிலர் மாண்டதும் நேயர்கள் அறிவார்கள். இப்பொழுது காக்சார்கள் தங்கள் ஆர்ப்பாட்டங்களை நிறுத்திவிட்டதாக, சர்க்கார் திருப்தியடைந்தால், தடையுத்தரவு வாபஸ் செய்யப்படலாமென்று தெரிகிறது. ஆர்ப்பாட்டத்தை விடுவதா வேண்டாமா, என்பதை யோசிக்க, காக்சார் தலைவர்கள் விரைவில் கூடிப் பேசுவார்கள் என்று சொல்லப் படுகிறது.

## இரண்டு துண்டு

**லா**கூரில் கூடிய முஸ்லிம் லீக் மஹா நாட்டில் ஸ்ரீ ஜின்னா ஒரு அற்புத யோசனையைக் கூறுகிறார்.

"ஐக்கிய இந்தியா ஏற்படுவதென்பது ஒரு கனவு. அகில இந்தியாவுக்கும் ஒரே பிரதிநிதிசபை இருப்பது கூடாது. அந்தக் கொள்கை விரைவில் கைவிடப்படவேண்டும். சிநேக பாவமிருக்கும் பக்ஷத்தில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சச்சரவின்றித் தத்தம் ராஜ்யங்களில் திருப்தியாக வாழலாம். இந்தலக்ஷியத்துக்காகப் போராட்டத்தை நீடித்து நடத்த வேண்டும்" இதுதான் ஜின்னாவின் யோசனை.

இந்தியா ஒரு தேசம்; ஒரேமதம். அதைத் துண்டாக்குவது முடியாத காரியம். அப்படிச் செய்வது தன்னைத் தானே வெட்டிக் கொள்வது போலாகும். ஒரே ஐக்கிய இந்தியாவால் வாங்க முடியாத சுயராஜ்யம் வெட்டுண்ட இந்தியாவால் எப்படி வாங்க முடியும்? வெகுகாலத்துக்குமுன் இந்தியா துண்டு துண்டாய் இருந்ததே இப்போதைய நமது நிலைமைக்குக் காரணம். இப்பொழுது மீண்டும் பழைய நிலையையே விரும்புவது என்ன கேடுகாலத்திற்கோ தெரியவில்லை.


### உங்கள் உயர்வுக்கோர் உன்னத வழி.

ஆங்கிலமறியாது அல்லற்படும் அன்பர்களே! மூன்றே வருடத்தில் கேம்பிரிட்ஜ் ஸீனியர் பரீக்ஷை தேற இன்றே முன்னிடம் தேடுங்கள். இங்கிலீஷ் பாடசாலைகளில் இடையில் கல்வி நிறுத்திய இளம் வாலிபர்களே! லோயர் கிரேட் சர்ட்டிபிகேட்டுகளுள்ள ஆசிரியர்களே! உங்கள் வாழ்க்கை முன்னேற முதற் காரணமாகவுள்ள ஆங்கிலப் பயிற்சிக்கு உங்கள் தொழிலுக்கிடையூறின்று இல்லத்திலிருந்தே ஆங்கிலம் கற்க, முழு விபரங்களுக்கும் இன்றே தம் தம் கருத்தையும், தற்பொழுதுள்ள கல்வி அறிவையும் தெளிவாகக் குறிப்பிட்டு முழு விபரங்களுக்கு எழுதவும்.

R. அச்சுதன் தம்பி B. A.,

இங்கிலீஷ் காரஸ்பாண்டன்ஸ் ஸ்கூல், திருவனந்தபுரம் (தென் இந்தியா)

இந்தியா, பர்மா, சிலோன், ரங்கூன், மலேயா முதலிய நாடுகளில்
பிரசித்தி பெற்று யாவராலும் புகழப்பெற்ற

பழனி வைத்தியாசிரியர் சி. எஸ். சாமி

# மன்மத குளிகை

உபயோகியுங்கள் !

தாதுபுஷ்டியில் மன்மதனேவென்று மயங்குவார்கள். இதற்கு நிகரான ஔஷதமில்லை! ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்!! என்றும் திடகாத்திரர்களாய், வீரபுருஷர்களாய் நல்ல ஆரோக்கியமும், பலமும் பெற்று, இல்லற இன்பத்தை அனுபவிப்பீர்கள். இக்குளிகை பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, களைப்பு, தாகம் முதலியனவைகளை நீக்கி, ஜீரண சக்தி, இரத்த விருத்தி, தாதுபுஷ்டி முதலியவைகளை உண்டாக்குவதில் பெயர் பெற்றது. பலத்தையும், ஆண்மையையும் கொடுத்து, போக காலத்தில் வெகு நேரம் வரையில் விந்தைக்கட்டி, ஸ்கலிதமாகாமல் தடுத்து இன்பத்தைக் கொடுக்கும்.

60 குளிகை விலை ரூ. 5—0—0. 20 குளிகை விலை ரூ. 2—0—0

# பிரமேகநிவாரணி

எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்டதானாலும் இதில் நிச்சயமாய்த் தீரும். பிரமேகம், இரத்தமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, குத்து எரிச்சல் நீரோடு விந்து கலந்து விழுதல் முதலியன குணமாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0. தபால் சார்ஜ் வேறு.

தலைமை ஆபீஸ்:—

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
பழனி. S. I. R.

பிராஞ்சுகள்:—

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
1/54, அருணசல நாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

195, செட்டியார் தெரு, கொழும்பு.
**COLOMBO, CEYLON.**

# என்  டயரி

"நாதன்"

## தயாராயிரு!

அலமுவுக்கு அநேகமாக உடம்பு குணமாகிவிட்டது. வீட்டு வேலை முழுதையும் வெகு சிரமப்பட்டுச் செய்யும் ஸ்வர்னத்துக்கு அலமு கூட மாட ஒத்தாசை செய்ய வருவாள். ஆனால் அதற்குக்கூட ஸ்வர்னம் விட மாட்டாள்.

"இதோ பார்! நீ ஒருவேலையும் செய்யப்படாது. எங்க ரகு டாக்டர் அப்படித்தான் உத்தரவு போட்டிருக்கார். நீ பேசாதெ அப்படி உக்காந்திண்டு ஒரு ராஜா கதை சொல்லு. அதுவே எனக்கு ஒத்தாசை செய்த மாதிரி..." என்று சொல்லி அடக்கி விடுவாள் ஸ்வர்னம்.

அலமு அவளுடைய அன்பு ததும்பும் அதிகாரத்துக் கடங்கி ஒரு பக்கம் உட்கார்ந்து கதை சொல்ல ஆரம்பிப்பாள். ஸ்வர்னம் ஆனந்தமாக அதை ரஸித்துக்கொண்டே சமையலை முடித்து விடுவாள்.

அன்றையதினம் ஸ்வர்னம் கறிகாய்களை நறுக்கிக் கொண்டிருந்தாள். அலமு அவளுக்குப் பக்கத்திலே உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

ஸ்வர்னம் "மன்னி! ஒரு கதை சொல்லமாட்டியா?......" என்றாள் கொஞ்சலாக. அலமு அவள் பேச்சை கவனிக்கவில்லை. உடனே ஸ்வர்னம் ஒரு கத்தரிக்காயை எடுத்து அவள் மீது விட்டெறிந்து விட்டு வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

அலமு சிறிது விழிப்படைந்தவளாய் "எண்டி! சித்தெ நாழிகூட வெறுமே இருக்கமுடியறதில்லையோ? என்னடி கதை சொல்றது! எனக்கு ஒண்ணுமே ஞாபகத்திலே இல்லை..." என்றாள்.

"மன்னி......மன்னி ஒரே..."
"போடி! இனிமே என்னை 'மன்னி'ன்னு அழைக்காதே! அக்கான்னு கூப்பிடு"

"ஏனோ அப்படி? வெட்கம் வந்துடுத்தாக்கும்! எங்க அண்ணாவோடெ அலமுதானே நீ! பின், நான் 'மன்னி'ன்னு கூப்பிடாதெ 'கன்னி' ன்னா கூப்பிடறது?" என்று விஷமத்துடன் கூறினாள் ஸ்வர்னம். அலமுவின் உதடுகளில் ஒரு புன்முறுவல் லேசாகத் தென்பட்டது.

"நீதானே, அன்னிக்கு உங்க அண்ணா என்னைக் கலியாணம் பண்ணிக்கப் போறதில்லைன்னு சொன்னே! அதனால்தான் நான் அப்படிச் சொன்னேன்..."

ஸ்வர்னம் ஏதோ சிறிது யோசித்தாள். "ம்-எங்கே ரகுவை நீயெல்லாம் கல்யாணம் பண்ணிப்பயா? நீங்கதான் பணக்காரராச்சே!" என்றாள் குறும்பாக.

"சீச்சி! அசடுமாதிரி பேத்தறதைப் பாரு—சரி கதை சொல்றேன் கேளு—ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜாவாம் அவருக்கு ஒரே ஒரு கூஜாவாம்—அதிலே ஒரே ஒரு ரோஜாவாம்..." என்று சொன்னாள் அலமு. பின் இருவரும் இடி இடியென்று சிரிக்க ஆரம்பித்தனர்.

பாடசாலையிலிருந்து வந்த கோபாலன் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வெளித்திண்ணையில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தவாறே வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அச்சமயம் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றான். 'தபால்' என்ற சப்தத்தைக் கேட்டதுமே அலமுவும், ஸ்வர்னமும் ஆவலுடன் வெளியே ஓடிவந்தனர்.

கோபாலன் அதை உடைத்து வாசித்து முடித்தார். "எம்பா! எங்கேருந்து லெட்டர் வந்திருக்கு?..." என்று கேட்டாள் அலமு. அதற்குள் கீழே கிடந்த கவரை எடுத்து அதிலுள்ள முத்திரையை கவனித்து "அக்கா, அக்கா! எங்க ஊர்லேருந்துதான் வந்திருக்கு—இதோ பார் 'நெல்லூத்துறை'ன்னு இருக்கு..." என்று அவசரமாகச் சொன்னாள் ஸ்வர்னம்.

"ஆமாடிம்மா, ஆமாம். அங்கிருந்துதான் வந்திருக்கு..." என்று சிறிது வெறுப்புடன் கூறினார் கோபாலன்.

"யார் எழுதியிருக்கா?..." என்று கேட்டாள் மீண்டும் அலமு. "எம்மாமா! என்னை வரச்சொல்லி அண்ணா எழுதியிருக்கானா?" என்று ஸ்வர்னம் குறுக்கிட்டாள்.

"உங்க அத்தைதான் எழுதியிருக்காள். இவள் தொந்தரை வேறே பெரிய தொந்தரவாயிருக்கு. கலியாணம் கலியாணம் என்று உறித்து விடுகிறாள். அவனென்றால் வேலையின்றிக் காலாடியாய்த் திரிந்து கொண்டிருக்கிறான்... எப்படிக் கலியாணத்தை முடிக்கிறது?

"பையன் படிச்சுத்தான் இருக்கான். மூளையும் இருக்கு. ஆனால் யோகந்தான் கடுகளவுகூட இல்லை. ஒரு வேலையைத் தேடி அமர மாட்டேங்கறானே! என்ன பண்ணித் தொலைக்கிறது? அவன் அப்பா சம்பாதிச்சு வச்சிருந்தா, இவன் சீட்டாடவும், சினிமாவுக்குப் போகவும், ஊர் சுத்தவும், பேப்பர் படிக்கவும் சௌகர்யமாத்தான் இருக்கும். ஆனால் அப்படி இல்லையே!

"அதென்னமோ எனக்குத் தெரியாது. இன்னும் ஒரு மாசத்துலே அவன் வேலையில் சேராட்டா, அப்புறம் வேறு இடத்தைப் பார்க்கவேண்டியதுதான்—எனக்கு என்ன, அந்தப் பெரிய இடம் இருக்கவே யிருக்கிறது......" என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டே எழுந்து 'விர்'றென்று பாடசாலைக்குச் சென்று விட்டார்.

அலமுவின் முகத்தில் சோகம் குடிகொண்டது. கண்களில் நீர் ததும்பியது. "அக்கா! சும்மாயிரு. மாமா என்னமோ கோவத்திலே அப்படிச் சொல்லிப் பிட்டார்..." என்றாள் ஸ்வர்னம்.

"ஏண்டி ஸ்வர்னம்! எனக்காகவாவது அத்தான் ஒரு வேலையில் சேரப் படாதா?..." என்று தழதழத்துக் கூறிவிட்டு நேரே பூஜையறைக்குச் சென்று "அம்பிகே! என் அத்தானுக்கு சீக்கிரமா ஒரு வேலை கிடைக்கும்படி செய்து, என் அத்தானையே மணக்கும்படி அருள் செய்யப்படாதா? ." என் அம்பிகையின் படத்துக்கு முன்

பிரார்த்தனை செய்தாள். ஸ்வர்ணமும் அந்தப் பிரார்த்தனையில் கலந்து கொண்டாள்.

**ஸ்ரீ**மான் கோபாலன் சொன்னது போல் ரகு வேலையின்றி அலைந்து கொண்டுதான் இருந்தான். அன்றைக்குத் தன் நண்பன் ராதாவிடம் 'ட்யூஷன் வேண்டாம், வேறு வேலைதான் பார்க்கணும்' என்று சொன்னானல்லவா! அதன் பிறகு அவன் தன்னை ஏதாவது வேலைக்கு சிபார்சு செய்யும்படி ராதாவிடம் கேட்டான்.

ராதா பெரிய பணக்காரன்தான்; செல்வாக்குடையவன்தான். டவுனில் அவனுக்கும், அவன் தந்தைக்கும் தெரியாத பெரிய மனிதர்களே கிடையாது. இருந்தாலுமென்ன? ரகுவின் துர் அதிர்ஷ்டம் ராதாவின் முயற்சியைக்கூட வியர்த்தமாக்கிற்று.

ரகுவுக்காக ராதா அனேக இடங்களில் முயற்சித்தான். பல இடங்களுக்கு சிபார்சுக் கடிதம் கொடுத்தான். எல்லா இடங்களிலும் 'விரைவில் கவனிக்கிறோம்; இப்பொழுது சந்தர்ப்பமேயில்லை' என்ற பதிலே கிடைத்தது. அதன் பின் ரகு இனி தானே முயற்சிப்பது என்று தீர்மானித்தான்.

ஒரு நாள் கையில் நீண்ட விண்ணப்பத்தை எடுத்துக்கொண்டு ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குள் நுழைந்தான் ரகு. அது சமயம் அந்தக் கம்பெனியின் மானேஜர் தன் நண்பர்களுடன் இடைவேளை டிபன் பண்ணிக் கொண்டிருந்தார்.

ரகு தயக்கத்துடன் பக்கத்தில் சென்று "ஸார்!" என்றான். மானேஜர் ருத்திர மூர்த்திபோல் திரும்பிப் பார்த்தார். "என்னடா இடியட்! பிச்சை கேட்க இதுதானா சமயம்!" என எரிந்து விழுந்தார்.

ரகு திடுக்கிட்டவனாய் "இல்லை சார்! நான் பிச்சைக்கு வரலே; ஐ ஒன்லி கேம்..." என்று ஆரம்பித்தான். "யூ ஷட் அப்; இடியட்! கெட் அவுட்!" என்று கத்தினான் மானேஜர்.

"இந்த மாதிரி சோம்பேறிப் பிச்சைக்காரர்கள் இருக்கத்தான் சார், நம்ப கன்ட்ரி இன்டிபெண்டென்ஸ் இல்லாதிருக்கு. இன்னும் கொஞ்ச நாள் போனால் நாம்கூட இந்த ரௌடி பெக்கர்ஸால் ஏழையாகவேண்டியதுதான்..." என்று ஒருவர் ஒத்துப்பாடிக்கொண்டே ஒரு சாத்துக்குடியை உள்ளே தள்ளினார். ரகு பெருமூச்சுடன் வெளியே வந்தான்.

ரகுவின் கால்கள் தாமாகவே இன்னொரு கம்பெனியின் வாயிற்படியைக் கடக்க முயன்றன. ஆனால் அங்கே யமன்போல் வீற்றிருந்த ஒரு தர்வான் "தும் கிதர் ஜாதே ஹோ! ஜாவ் ஜாவ்" என்று கர்ஜித்தான்.

"நான் முதலாளியைப் பார்க்கணும் தயவு செய்து......" என்றான் ரகு. "க்யா மூட்லாளி? க்யா பாக்ணும் முத்லாளி நஹீ—ஜாவ்...ஜாவ்......" என விரட்டினான் தர்வான்.

அதன்பின் 'ஆள் தேவை' என்று போர்டு போட்டிருந்த ஒரு பங்களாவுக்குள் நுழைந்தான் ரகு.

வீட்டுக்காரர் "உனக்கு வேஷ்டி துவைக்கத் தெரியுமா?—சமைக்கத் தெரியுமா? வீடு சுத்தம் செய்யத் தெரியுமா? குழந்தையை வைத்துக் கொண்டிருக்கத் தெரியுமா?" என்று கேள்விகளை அடுக்கினார்.

ரகு எல்லாவற்றிற்கும் ஒரே பதிலாய்த் 'தெரியாது' என்று சொல்லித் திரும்பினான். இதுமாதிரி அவன் ஒரு ஆயிரம் இடங்களில் அலைந்து பார்த்தான். எங்கும் 'இல்லை' என்ற பதில்தான்.

வேலை தேடச் சென்ற ரகு இரண்டு நாட்களுக்குப் பிறகு சோர்வுடன் வீட்டுக்கு வந்தான். "இனிமே எந்தப் பணக்காரக் கழுதைகளிடமும் சென்று வேலை கேட்பதில்லை..." என முணுமுணுத்துக் கொண்டான்.

"ஏண்டாப்பா ரகு! ஏதாச்சும் அகப்பட்டதா?" என்று ஆவலுடன் கேட்டாள் மங்களம். "ஆம்!" என்ருன் ரகு. "ம்—நிஜமா?" என்று மங்களம் குதூகலப்பட்டாள்.

"ஆமாம்மா! 'நோ வேகென்ஸி—இல்லையில்லை—கெட் அவுட் இடியட்' என்ற வசவுகளெல்லாம் அகப்பட்டன..." என்று ரகு வெறுப்புடன் கூறினன்.

"அதென்னப்பா! எத்தனையோ பேருக்கு வேலை கிடைக்கிறது. உனக்கு மட்டும் ஏன் கிடைக்கிறதில்லையோ?..."

"ஏன? எனக்கு எவனையும் ஐஸ் போடத்தெரியாது; லஞ்சம் கொடுக்கத் தெரியாது. பசப்பு வார்த்தை பேசத் தெரியாது; ஒருத்தன் வேலைக்கு உலை வைக்கத் தெரியாது. பொதுவாக நான் அயோக்யனய் இல்லை. அதனல் தான்..." என்ருன் ரகு.

அப்பொ, வேலையிலிருக்கறவனெல்லாம் அயோக்கியனு?" என்ருள் மங்களம். "இல்லை; இரண்டொருவர் நல்ல மனிதர்களும் உண்டு......"

இச்சமயம் "ஸார் தபால்!" என்ற சப்தத்தைக் கேட்டு வெளியே வந்தான் ரகு. ஒரு கடிதம் ஒரு பத்திரிகை, பத்து ரூ. மணியார்டர் முதலியவைகளைக் கொடுத்துச் சென்ருன் போஸ்ட் மேன்.

ரகு சில நாட்களுக்கு முன் ஒரு கதை எழுதி 'மதி ஒளி' என்ற பத்திரிகைக்கு அனுப்பியிருந்தான். இப்பொழுது அது பிரசுரம் ஆனதோடு அந்த 'மதியொளி'யிலிருந்து பத்து ரூ சன்மானமும் ரகுவுக்கு வந்து விட்டது.

ரகு அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே கிடையாது. இனிமேல் தன் ஜீவியத்தைக் கட்டுரை எழுதுவதிலேயே கடத்துவதென்று தீர்மானித்தான்.

"ரகு, அதென்னடா இன்னெரு கடிதம்?" என்ருள் மங்களம். "அதுவா! உங்க அண்ண எழுதியிருக்கார். நான் வேலையில் சேராட்டா, வேறு யாரோ திருதராஷ்டிர விலாசத்துக்குத்தான் தன் பொண்ணைக்கொடுக்கப் போருராம்" என்று சிறிது கோபத்துடன் சொன்னன் ரகு.

"அட கடவுளே! இவன் ஏன் அந்தக் குருட்டு மாப்பிள்ளையையே கட்டிண்டு அழருன்! என்னதான் பணம் இருக்கட்டும், ஒரு பொண் தலையில் கல்லைப் போடலாமோ?..." என்று அங்கலாய்த்தாள் மங்களம்.

மாலை 4 மணிக்குத் திண்ணையில் உட்கார்ந்து ரகு தன் கட்டுரை வெளியான 'மதியொளி'யைப் படித்துக்கொண்டிருந்தான். "என்னடா! பேராசிரியரே!! ஏது கற்பன லோகத்தில் சஞ்சாரம் செய்யருப்லே இருக்கே!" என்று சொல்லிக்கொண்டே ராதா அங்கு வந்தான்.

"ஓ! அலவ், அலவ்!! குட்மார்னிங் மிஸ்டர் ராதா" என்று குதூகலத்துடன் வரவேற்ருன் ரகு. ராதா அவனுக்குப் பக்கம் உட்கார்ந்தான். "என்ன பிரதர் காப்பி ஸீப்பி ஆச்சோ?—வந்து—எம்மா! ராதா வந்திருக்கான். டிபன் ரெடியாயிடுத்தா? சீக்கிரம் கொண்டா!" என்று திண்ணையிலிருந்தபடியே தாயாருக்கு உத்திரவிட்டான் ரகு.

"டேய் ரகு! இப்பதாண்டா, ரெண்டு தோசை, நாலு தேங்குழல், மூணு போளி, ரெண்டு கப் காப்பி சாப்பிட்டு வரேன். இனி யொன்றும் 'பிரபரேஷன்' வேண்டாம்'' என்ருன் ராதா.

இதற்குள் மங்களம் இரண்டு தட்டு ரில் சீடைகளும், காப்பியும் கொண் வந்து வைத்தாள். இருவரும் சாப் பிட ஆரம்பித்தனர். ரகு இடையில் ராதாவுக்குத் தன் கட்டுரையைப் படித் துக் காண்பித்துக்கொண்டிருந்தான்.

"டேய் ரகு! அதெல்லா மிருக்கட் டும். ஒரு விஷயமல்லவா!......'' என ஆரம்பித்தான் ராதா.

"என்ன ஒரு விஷயம்?.........'' என ஆவலுடன் ரகு கேட்டான்.

"ரகு! நானென்னமோ இனிமேல் படிக்கப்படாதுன்னுதான் இருந் தேன். ஆனல், மதராஸிலே இருக்கும் ஒரு கோடீஸ்வரர் தன் பெண்ணேயும் கொடுத்து, சீர் செனத்திகளும் நிறை யச் செய்து, என்னே லண்டன் படிப் புக்கும் அனுப்பப் போருராம். அப்பா எல்லாம் முடிவு செய்து விட்டார். இரண்டு நாளில என்னேப் போய்ப் பெண் பார்த்து வரச் சொல்லி யிருக் கிருர்கள்.........'' என்ருன் ராதா பெருமிதத்துடன்.

"ம்-யூ ஆர் எ லக்கி பெலோ! வெளுத்து வாங்கு. ஆனல் லண்ட னுக்குப் போய் துரையாக மட்டும் மாருதே!'' என்ருன் ரகு.

"சரிதான் பெண்ணேப் பார்க்க நீ யும் வரணும். நான்தான் சங்கோஜப் பேர்வழி யாயிற்றே.........''

"சரி வருகிறேன். எப்பொழுது புறப்படப் போகிருய்?.........''

"டேயாப்டர் டுமாரோ, ஈவினிங், எய்ட் பிப்டீன் எக்ஸ்ப்ரஸுக்கு. பீ ரெடி! அப்புறம் சாக்குச் சொல்லப் படாது. சரி நான் போயிட்டு வரேன் தயாராயிரு.'' என்ருன் ராதா. ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனய் "எஸ் ஐ வில் பி ரெடி'' என்ருன் ரகு.


**ஜோதிஷ மகுட வர்த்தனர்**

**9—5—'38-ல் சென்னே ஜோதிஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்**



இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர்புஜண்டர், சாஸ்திர நிபுணர். ஜாதகம் கணிக்க ரூ-2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், மற்றும் பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ-3. ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 3 கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்பிரமணியம், J. M., & J. A.

நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத். P.O. (சென்னே)

வெளிநாடு வி. பி. கிடையாது. Walajabad. S. I. R.



டோங்ரேயின்

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்



## லீவர் கைக் கடியாரம்



நவீன அமைப்பு, நல்ல உழைப்பு. 10 வருஷ உத்தரவாதம். வட்டம் அல்லது சதுர உருவம் ரூ. 3 உயர் ரகம் ரூ. 3/8. ரேடியம் டயல் ரூ. 4/8. 18 காரட் தங்கமுலாம் பூசிய கேஸ் ரூ. 5/8. படத்தில் கண்டுள்ள உருவம் ரூ. 9/12. தங்க நிறம் ரூ. 11/12. தபால் செலவு அணா 14. எதாவது மூன்று வாங்கினால் தபால் செலவு இனாம். ஒரு கெடியாரத்துடனும் 1 பவுண்டன் பேனா, 1 டார்ச் லைட் இலவசம்.

ரங்கூன் ஸிலோன் வாசிகள் அட்வான்ஸ். அனுப்பவும்.

**CALCUTTA CLOCK Co, (Sec 153)**
15/1/A, Joymitter Street,
Hatkhola P. O., CALCUTTA.



# N. M. K.

RAMASAMY

CHETTIAR,

COIMBATORE.






—கே. கமலாம்பாள்—

அத்தியாயம் 23 (தொடர்ச்சி)

## புத்துணர்ச்சியும், இன்பப்பெருக்கும்.

நரேந்திரர் தனது ஆர்வத்தை அடக்க முடியாதவனாய் மறுபடியும் பாமினியின் கரத்தைப்பற்றி, ஆசையின் மிகுதியால் தனது உள்ளங்கையுடன் சேர்த்து அழுத்திப் பிடித்தான்.

அடுத்த சில வினாடிக்குப் பிறகு பாமினி திரும்பிப் பார்த்து "ஆ, அதோ அண்ணா ராம்மோஹன் வருகிறார், விட்டுவிடுங்கள் கையை; சீக்கிரம் விட்டுவிடுங்கள்" என்று நாணம் மேலிட, கெஞ்சுவதுபோல் கேட்கவும், நரேந்திரர் ராம்மோஹன் வரும்திசையைப் பார்த்துவிட்டு அவளது கையை விட்டுவிட்டான்.

பாமினி "நான் மாளிகையினுள் செல்லுகிறேன்" என்றாள். நரேந்திரர் சரி, என்பதற்குப் பதிலாய்த் தலையைச் சிறிது அசைத்தான். பாமினி மாளிகைக்குள் செல்லப் புறப்படவும், அச்சமயம் அவ்விடம் வந்த ராம்மோஹனைப் பார்க்க, இருவர் முகத்திலும் சந்தோஷமான சிரிப்பு உண்டாயிற்று. பிறகு பாமினி துரிதமாகவே மாளிகையினுள் சென்றுவிட்டாள்.

பிறகு நரேந்திரரும் ராம்மோஹனும் அருகில் நெருங்கவும் ஒருவர் கையை மற்றவர் பற்றிக் குலுக்கிக் கொண்டனர். இருவரும் அங்கிருந்த கல்லாசனத்தில் அமர்ந்தனர்.

ராம்மோஹன் "என்னப்பா நண்பா, நமக்கெல்லாம் எப்பொழுது கலியாணச் சாப்பாடு கிடைக்கப் போகிறது?" என, நரேந்திரர் சிரித்தபடி, "எப்பொழுது கிடைக்கப் போகிறதென்பதைக் கலியாணப் பெண்ணின் சகோதரனாகிய நீ யல்லவோ சொல்ல வேண்டும்?" என்று கூறிவிட்டு, பிறகு, தானும் பாமினியும் பேசிக்கொண்டிருந்த விஷயங்களைக் கூறினான்.

பாமினிக்கும் நரேந்திரரை விவாகம் செய்துகொள்ளப் பூர்ண இஷ்டந்தா னென்பதை யறிந்ததும் ராம்மோஹன் அடைந்த சந்தோஷம் கொஞ்சமல்ல.

## அத்தியாயம் 24.

## சு க வா ழ் வு

மேற்கண்ட சம்பவங்களுக்குப் பிறகு மறுமாதம் அதாவது வைகாசிமாதம் இருபதாந் தேதி வெள்ளிக் கிழமையன்று நரேந்திரருக்கும் பாமினிக்கும் அதிவிமரிசையாய் சாந்திநிகேதனத்திலேயே விவாகம் நடந்தேறியது. இப்பொழுது சேகர் பாமினியைத் தனது சொந்தப் புத்திரியைப் போலவே நினைத்து அன்புகொண்டிருந்தபடியால் அவளது விவாகத்தால் மிகவும் சந்தோஷம் கொண்டு, பாமினிக்கு எண்ணாயிரம் ரூபாய்களுக்கு சீர்வரிசைகள் செய்து சந்தோஷித்தான். இந்துவும் ராம்மோஹனும், பாமினிக்குண்டான இடர்களெல்லாம் நீங்கி அவள் நற்கணவனை அடைந்து, உன்னத நிலைக்கு வந்ததைக்கண்டு அளவற்றசந்தோஷம் கொண்டு ஆனந்த சாகரத்திலாழ்ந்தனர். நாகேந்திரரும், பவானியும் தங்களது இஷ்டம் நிறைவேறியதற்குக் கடவுளைத் துதித்து, தம்பதிகளை மனமார வாழ்த்திச் சந்தோஷித்தனர். ஹேமவதியம்மாளும், தன் மகனுக்குகந்த மனைவியும், தன் மனதிற்கிசைந்த மருகியும் வாய்த்தது பற்றி பூர்ண திருப்தியடைந்து, அவர்கள் சகல சுகபோகங்களுடனும் நீண்ட நாள் வாழவேண்டுமென மனப்பூர்வமான வாழ்த்துக்கூறி ஆனந்தத்துடன் அக்கலியாண வைபோகத்தைக் கண்டு களித்தாள்.

சந்தரும், சிறிது இருந்த துர்க்குணங்களும் நீங்கப் பெற்று உத்தமனாகி, பாமினியைச் சகோதரிபோல் பாவித்து, தன்னிலும் உயர்ந்தகுணங்களுடைய நரேந்திரரை அவள் மணந்து கொண்டதற்காக உண்மையில் மிகவும் சந்தோஷத்தையடைந்தான். இப்பொழுதுள்ள அவனது உன்னத நடத்தையைக் கண்ட அனைவரும் ஆச்சரியமும் சந்தோஷமும் கொண்டனர்.

சேகர் ராம்மோஹனைப் பிரிந்திருக்க மனமின்றி இந்துவையும் ராம்மோஹனுடன் தனது மாளிகையிலேயே வசிக்கும்படி

கேட்டுக் கொண்டு, பல்லவபுரியில் தனக்குச் சொந்தமாகவுள்ள ஓர் பெரிய மாளிகையில் அவர்களுடன் வசித்துவந்தான். அவன் தனக்குள்ள சொத்துக்களில் முக்கால் வாசியையும் ராம்மோஹன் பெயருக்குச் சாசனம் எழுதிவைத்துவிட்டான். ராம்மோஹனும் இந்துவும் சில நாள் பாமினியிடமும், சில நாள் சேகர் இல்லத்திலுமாக இருந்து சந்தோஷத்தை யனுபவித்தார்கள். ஹேமவதியம்மாளும், இந்து அம்மாளும் மிகவும் அன்னியோன்னியத்துடன் உத்தம சகோதரிகளைப் போலிருந்து வந்தார்கள்.

பாமினியின் அம்மானும் அவரது பத்தினியும், தங்களிடம் பாமினி வசித்து வந்த காலத்தில் தாங்கள் அவளிடம் அன்புடையவர்களாக இருந்தாலும் அதைச் சிறிதும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவளிடம் அன்பற்றவர்கள்போல் எப்பொழுதும் கடுகடு வென்று இருந்தது, அவளது மனதை வருத்தச் செய்து வந்ததை நினைத்து மிகவும் விசனித்து, தங்களது செய்கைக்காக உண்மையில் மிகவும் பச்சாதாபமடைந்து, இப்பொழுதாவது, சிறுவயது முதல் சிறுமைப் பட்ட் அவள், நல்ல பதவியையடைந்ததற்காகச் சந்தோஷித்தனர். அவள் என்றும் சுகவாழ்வில் இருக்கக் கடவுள் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்ததுடன், பாமினியின் குடும்பத்தில் என்றும் நன்றியுள்ளவராக இருந்து வந்தனர்.

பாமினியும் நரேந்திரரும்கருத்தொருமித்தகாதலர்களாய்ப்பூவும் மணமும் போல் அன்னியோன்னிய தம்பதிகளாய் சகல சுகபோகங்களையும் அனுபவித்ததுடன், பாமினியும் பவானியும் பரஸ்பரம் உள்ளன்பு கொண்டு தனியழகு பெற்று விளங்கினர். அவ்விதமே நாகேந்திரரும், நரேந்திரரும் ஒருவரை விட்டொருவர் பிரியச்சகியாதவராயும், ஒருவருக்குத் தெரியாத இரகசியம் ஒருவரிடமில்லாமலும், உயிரொன்றும் உடலிரண்டுமாக இருப்பது அனைவரும் வியக்கும்படி இருந்தது. ஆனந்தமும், அமைதியும் பெற்ற அந்த இனிய குடும்பம் என்றும் மங்களகரமாய் இருக்கக் கடவுள் அருள் பாலிப்பாராக.

சுபம்! சுபம்!!

---

## அடுத்த இதழில்

### ஸ்ரீ. எஸ். ஏ. மருதையன் எழுதிய

## "தரும பூமி",

### தொடர்ந்து வெளிவரும்

# கலியாணம்?

[ "கேசி" ]

ராமுவைக் கூப்பிட்டார் கோபால ஐயர். "ராமு! இன்றைக்கு சாயந்திரம் சம்பந்தி வீட்டுக்காரர்கள் வருகிறார்களடா. சமத்தாயிரு!" என்றார் ஐயர். ராமுவால் அவன் காதுகளையே நம்பமுடியவில்லை. "என்ன எனக்குக்கூடக் கலியாணமா?" என்று ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிப் போய்விட்டான். உடனே ஓடினான் அவன் நண்பர்களிடம். "டேய்! சேஷா, எனக்கு 'மேரியேஜ்' செய்யப் போறாங்கடா. நிச்சயமாய்விட்டது" என்றான் ராமு முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக்கொண்டு.

இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டதுதான் தாமதம்; அவனுடைய சிநேகித வானரங்கள் அப்படியே அதி ஆச்சரியத்தில் மூழ்கிப் போய்விட்டார்கள். "டேய்! ராமுவுக்கா கலியாணம்!" "டேய்! நம்ப ராமுவுக்குக்கூடக் கலியாணமா!" என்று பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். ராமுவுக்குக் கலியாணம் என்ற விஷயம் உலகத்திலேயே நடக்கக்கூடாத சம்பவமாகப்பட்டது அவர்களுக்கு. ராமுவுக்கோ சந்தோஷம் பிடிபடவில்லை. நேரே வீட்டிற்கு ஓடினான்.

மெதுவாக ரூமிற்குள் தலையை நீட்டினான் ராமு. உள்ளே கோபால ஐயருக்கும் கணேச ஐயருக்கும், வரதட்சிணை, சீர் இந்த விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. அவர்கள் பேசினதிலிருந்து மாப்பிள்ளைக்கு ஆயிரம் ரூபாய் வரதட்சிணை என்று ராமுவுக்குத் தெரிந்தவுடன் உண்மையிலேயே தனக்குக் கலியாணம் தானா என்று அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. எஸ். எஸ். எல். ஸி. கோட்டையை மூன்றாவது தரமாக முற்றுகை யிட்டிருக்கும் ராமுவுக்கு வரதட்சிணை ரூபாய் ஆயிரம் என்றால் அது நடக்கக்கூடிய காரியமா?

கலியாண தினம். ராமு பெண்ணைப் பார்த்தான். அவனுக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. அவன் அப்பா இருக்கிறாரே, அவர் வந்தார் ராமுவிடம். 'டேய்! ராமு இந்த வேஷ்டியை உடுத்திக்கொள்,

என்று ஒரு ஒண்ணரை ரூபாய் வேஷ்டியை நீட்டினார். ராமுவுக்குப் பிரமாதமாய்க் கோபம் வந்துவிட்டது. "ஐயோ! அப்பா, இந்தச் சமயத்திலேதானா பணத்திலே சுஷ்கம் பிடிக்கிறது! நல்ல வேஷ்டியாய் எடுக்கக்கூடாதா?" என்று கேட்டான். "அட, பயலே! உன் கலியாணத்தின்போது நல்ல ஜோரான மயில்கண் வேஷ்டி வாங்கித் தரேண்டா. இப்ப, இது போதும்" என்றார் அப்பா. "அப்படியென்றால்........இப்ப........எனக்கு......கலியாணம்........இல்லையா?" ராமுவால் மேலே பேசமுடியவில்லை. "அட அசட்டுப் பயலே! அதுக்குள்ளெ உனக்கு என்னடா கலியாணத்திற்கு அவசரம்? உன் அம்மா செத்துப்போனதிலிருந்து எத்தனை நாளைக்குத்தான் நானே அடுப்பை ஊதிக்கோண்டு ஒண்டியாய்த் திண்டாடுகிறது. அதனால் இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கப் போறேன்" என்றார் ராமுவின் அருமை அப்பா. கொஞ்ச நேரத்திற்கு முன் ஒரே ஆச்சரியத்தில் மூழ்கிக் கிடந்த ராமு, இப்பொழுது ஒரே ஏமாற்றத்தில் மூழ்கியே போய்விட்டான்.


ஆப்டோன், லைன்
கலர் பிளாக்குகள்




குறித்த
காலத்தில்
குறைந்த
விகிதத்தில்

சுத்தமாகச்
செய்துகொடுக்குமிடம்

M. DEVAN & CO.,
PROCESS ENGRAVERS.
78. SAINT XAVIER ST., G.T. MADRAS.

கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

# என் இச்சை

கே. எஸ். ஜீ.

பௌர்ணமியன்று, பூர்ண சந்திரன் நிகரில்லா சோபையுடன் வானவீதியில் தவழ்ந்து வருகிறான். அவனுடைய பெரிய வட்டத்திலிருந்து விளம்பும் குளிர்ந்த கிரணங்கள், பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் மனதை உல்லாஸத்தில் லயிக்கவிட்டு மெய்ம்மறந் திருக்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க்கையின் சுகதுக்கங்களை யெல்லாம் சற்றே மறந்து பிரம்மசிருஷ்டியின் விநோதங்களைப்பற்றி சிந்திக்க, குளிர்ந்த நிலவொளியைத் தவிர வேறு சிறந்த சாதனம் இருக்க முடியுமோ?........ ஆனால் இந்த ஒப்பில்லாச் சௌந்தர்யத்தில் எனக்குப் பங்கு இல்லை போலும்! கவிகள் வர்ணிக்கும் வெண்ணிலாவின் இத்தகைய துல்லிய ஒளி, எனக்குப் பாலைவனங்களில் காயும் கோடைகாலச் சூரியனின் கொடிய உஷ்ணக் கிரணங்களைக் காட்டிலும் கொடூரமாகத் தோன்றுகிறதே!......மதியின் மந்தகாஸத்தை ரவிக்கும் தன்மையே இல்லாமலா போய்விட்டது?........ ஆமாம், இதற்கு அடிப்படையாயுள்ள காரணத்தை தான் அறிவேன். என் மனைவி ராஜம் ஊரிலில்லை. பிறந்தகம் போயிருக்கிறாள்.

இப்படி நான் எழுதிக் கொண்டே போவதால், ராஜமும் நானும், மட்டற்ற ஒற்றுமையுடன், மாசிலா மணிகள்போல், ஜீவியத்தின் ஆனந்த ஊற்றை, கை நிறைய அள்ளி அள்ளிப் பருகிக் கொண்டு, அவளுடைய பிரிவால் நான் வருந்துவது போலவும் எல்லோரும் கருதக்கூடும். ஆனால் உள்ளதைச் சொன்னால் நீங்கள் வியப்படையத்தான் செய்வீர்கள்.

அவள் பிரிவுக்கு நான் வருந்துவது உண்மைதான். அவளில்லாத உலகம், எனக்கு இருள்சூழ்ந்து ஸாரமற்றதாகத் தோன்றுகிறது. ஆனால் என் ஜீவியத்தின் ஆனந்த ஊற்றில் அமுத நீரில்லையே! அது வற்றி வறண்டல்லவா கிடக்கிறது. அப்படியே ஊற்றிருந்தாலும், என் கரங்கள்தான் எப்படி எழும், அதை அள்ளிக் குடிக்க? சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்..!...

நாங்கள் வாழ்க்கையின் மேடு பள்ளங்களிலெல்லாம் சமமாக ஏறி இறங்கவில்லை. என் வாழ்க்கை துன்பமும், கசப்பும் நிறைந்தது. அதில் மகிழ்ச்சி யில்லை; மயக்கமுண்டு. குதூகலம் உற்சாகம் என்பது மருந்துக்குக் கிடையாது........எங்கள் மனப்பான்மைகளுக்கிடையே, மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம்! எல்லாச் சுகத்தையும், ஒரு ரூபவதியையும் அருளிய பகவான் எங்களிடையே ஒற்றுமையைக் கொடுக்க மறந்துவிட்டான்.

நான் ஒரு சாதாரண தேசபக்தன். சுதந்திரப் பற்றுடையவன். அவளோ, முற்றிலும் மேல் நாட்டு நாகரீகம் படைத்த நாரீமணி. செல்வத்தில் வளர்ந்தவள். மனைவியாகூலத்தை இதுவரை கண்டறியாதவள். எங்களிடையேஒற்றுமையின்மைக்குக்கேட்பானேன். அவளுடைய சாதாரணப் பேச்சே உணர்ச்சி வேகம் பொருந்தியதாயிருக்கும். பாவம்! பேதமையினால், அவள் கதரை வையாத நாள் கிடையாது.

இவைகளில் கூட எனக்கு அதிக வருத்தமில்லை. ஆனால் அவளுடைய மேல் நாட்டு மோகம்—என் தாம்பத்ய வாழ்க்கையின் இன்னிசையில் ஒரு

அபஸ்வரத்தை ஏற்படுத்துகிறதே! அதை நான் எப்படி சகிக்கக் கூடும்? நானும் படித்துப் படித்துச் சொல்லி விட்டேன்; பயன்படவில்லை. "நீ உன் வாழ்வைத் துறந்தாலென்ன?" என்று என் அந்தராத்மா என்னை ஏசக்கூடச் செய்கிறது.

அவள் படித்த பெண் தான்; உலகப் போக்கை அறியவேண்டிய வயதையும் கடந்துவிட்டாள். இருந்தாலும் குழந்தைப் புத்தி மாத்திரம் மாருமலிருப்பதின் விந்தை என்னவோ? அன்று, "கதரில் நல்ல புடவை ரகங்கள் வந்திருக்கின்றன, இந்தப் புடவை எப்படி?" என்று நான் சிலமாதிரிகளைக் காண்பித்தேன். என் கேள்விக்கு பதில் வரவில்லை; பாரிஸ் நகரில் செய்த வாஸனைத்தைலம் வாங்கி வராமல் வந்துவிட்டதற்காக முகத்தைச் சுளிக்கிருள் அசட்டுப் பெண். இன்னும் இதுபோல் எத்தனையோ!

நானும் பொறுமையை இழக்காமல் நயத்திலும், பயத்திலும் மன்ருடினேன். ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. அவளுடைய சௌகரியங்களுக்கு நான் தடை செய்யவில்லை. நான் கேட்பது ஒரு பிக்ஷை—இனி மேலாவது தேசப்பற்றுடன் இருக்க மாட்டாயா?—அவ்வளவுதான். நான் ஸ்திரீ சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டைபோட யத்தனிக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல; தீவிர சீர்திருத்தவாதியுமல்ல. ஆனல் எங்களிடையே நிலவும் விரோத மனப்பான்மைக்கு இடங் கொடுக்கத்தான் நான் விரும்ப வில்லை.

ராஜமும் எத்தனையோ தடவைகள் பிறந்தகம் போய்த் திரும்பி வந்துவிட்டாள். நாளா வட்டத்திலும் கூட அவள் மனம் மாறவில்லை. என் போதனைகள் விழலுக்கிறைத்த நீரானத்தில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

இருண்ட புகைமண்டலம், என் இல் வாழ்க்கை வானைக் கவிழ்ந்துகொண்டது. கல்யாணத்திற்கு முன்பு நான் எண்ணத்தின் அஸ்திவாரத்தின் மீது நிர்மாணித்த கற்பனைக் கோட்டைகள் வெடித்துச் சிதறியோடின. இந்த எழில் மிகுந்த சுந்தரி, தூய, கதரில் எவ்வளவு பொலிவுடன் விளங்குபவள், என்று எண்ணும் போதெல்லாம் ஆனந்தக் கண்ணீர் என் விழிகளில் வழிகிறது. 'இந்தப் பெண்ணிற்கு அது தெரியவில்லையே' என்று நான் வீணில் வருந்துகிறேன்; மனம் வெதும்பிச் சொல்லவும் மாட்டாமல், மெல்லவும் மாட்டாமல் காலத்தைக் கழிக்கிறேன்.

இதுவரையில் சொன்னது பழங் கதை; என் வாழ்க்கைச் சித்திரத்தின் துன்பப் படலம்.

காலச் சக்கரம் வெகு வேகமாகச் சுழன்றது; பிரபஞ்சத்திற்கு சுக துக்கங்கள் மாறி மாறி வந்து போய்க் கொண்டிருந்தன. ராஜத்தின் மனோபாவத்தில் மாறுதலின் சின்னங்கள் தோன்ற வாரம் பித்தன... மறுபடியும் ஒரு முறை அவள் பிறந்தகம் போய் வந்தாள். இந்தத் தடவை நிச்சயமாக மாறி விட்டாள்.........

பாரிஸ் தைலப்புட்டி இருந்த இடத்தில் தேங்காயெண்ணைக் குப்பி இருந்தது. கொடியில், பழைய பட்டுப் புடவைகளுக்கு நடுவே, கண்ணைக் கவரும் வனப்புடன் கதர்ப்புடவை ஒன்று விளங்குகிறது. நான் முதலில் என் கண்களையே நம்பக் கூடவில்லை. அதிர்ஷ்ட தேவதையின் ராஜ்யத்தில் எனக்கும் இடம் கிடைத்து விட்டது. வாடி வதங்கிக் கிடந்த என் குழிந்த கண்களிலும் ஒரு புத்தப் புது சுந்தர ஒளி வீசுகிறது. என் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் குதூகலம் நிரம்பி வழிகிறது. ராஜம் மாறிவிட்டாள். நிச்சயமாய் அவளுக்குத் தேசப்பற்று வந்து விட்டது. இதை நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு எழுதுகிறேன்.

ஆனால் இந்தப் பேரானந்தத்தை நான் அதிக நாள் அனுபவிக்கக் கொடுத்து வைக்க வில்லை. அவ்வளவில் நான் துர்பாக்கியனானேன்...... 'வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழி உடைவதுபோல்' என்று சொல்லுவார்கள். அது என் விஷயத்தில் முற்றிலும் பொருத்தமாகி விட்டது... ஒன்றுமில்லை; இரண்டு நாள் ஜுரத்தில், காலனின் கொடிய ஸ்பரிசம் அவள் மேல் பட்டு விட்டது. பாவி, என்தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டான். மூன்றாம் நாள் காலை, அவளுடைய ஆவி துயரக் கூட்டினின்றும், விடுதலை பெற்று, சொல்லிக் கொள்ளாமல் பறந்தோடி விட்டது. அந்தகாரமான இப் புவியில்—அஞ்ஞான இருள் சூழ்ந்த இவ்வுலகில்—ஞான ஒளியான அவளை இனிக் காணமுடியாது. என் வாழ்க்கையில் புனித ஒளியுடன், மகா ஜாஜ்வல்யத்துடன், ஜ்வலித்துக் கொண்டிருந்த மங்கள தீபத்தின் சுடரொளி அணைந்து விட்டது.

பாரில் மறுபடியும் அதே பூரண சந்திரன். வெண்ணிலாவும், மந்த மாருதமும் கவிகளின் வர்ணனைக் கூண்டில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கின்றன. இயற்கையின் சௌந்தர்ய லகரி உச்ச நிலையிலிருப்பதாகக் காதலர்கள் உரைக்கின்றனர். ஆனால் எனக்குமட்டும் எல்லாம் வெறும் கட்டாந்தரை; உப்புச் சப்பில்லாத மண்ணாங் கட்டி........என்னையும் மீறி, குமுறிக் கொண்டு வரும் ஆத்திரத்தையெல்லாம் அள்ளிக் கொட்டி மண்டை வறள எழுதுகிறேன். சக்திச் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் எனக்கு அதுதான் அந்தரங்க வழிகாட்டி.

பிரமன் எழுதினான்; எமன் எடுத்துக் கொண்டான்; நான் தயங்கித் தவிக்கிறேன். அவள் பெண்ணாகப் பிறந்ததும், மண்ணாய்ப் போனதும் எனக்கு ஒன்றுதான். நான் இன்னமும் நித்யானந்தத்தை நுகரவில்லை.

சத்! என்ன கண் மூடித்தனமான பிரபஞ்சம்! அவதிப்படும் என் இதயத்தை அறியக் கூடாத மாயாப் பிரபஞ்சத்திற்கு என் புண்பட்ட நெஞ்சின் உறுத்தல் எங்கே தெரியப் போகிறது? தன்னைத்தானே சதா சுற்றிக் கொண்டிருக்கும் முட்டாள் உலகத்திற்கு உன் மத்தம் தலைக்கேறி விட்டது போலும்? சாவே, நீவா! உன் ஆலிங்கனத்தைத் தான் கடைசியாக விரும்புகிறேன். அதுதான் என் இச்சை.


## Wanted 40 Candidates

To get highest degrees in Homoeopathy, Bio-chemistry etc. Books supplied free. Excellent Postal tution. Very low fees. Apply with two annas stamps.

**The Ragland's Eastern Medical College,**

THENI. S. I. R.

# மேல்வரும்படி

[டி. ஆர். பந்துலு]

"ஏண்டீ ஜானகி! இன்னைக்கு சாயங்காலம் குழந்தைகளுக்குக் கொஞ்சம் பாதாங்கீர் பண்ணிக் கொடுடீ. குழந்தைகளெல்லாம் இளைத்துப் போயிருக்கு. அந்தப் பொண்ணுலே ஒரு பாட்டுக்கூடப் பாட முடியவில்லை. பெரிய பையன் இராத்திரியும் பகலும் விழுந்து விழுந்து படிக்கிறான்; உடம்பு என்னத்துக்கு ஆகும்! நம்ம குழந்தைகளுக்குக் கொஞ்சம்கூட போஷாக்குப் போதவே போதாது.''

"கெட்ட கேட்டுக்கு பாதாங்கீர் வேறயா? தெருவிலே போனா நாலு பேர் சிரிக்கிறா. அதற்கு வழி ஒண்ணையும் காணோம். குழந்தைகளுக்குக் காதுலே, மூக்குலே, கையிலே எல்லாம் சுத்த மண்டலம். அறுத்த கம்பண்டாட்டியாட்டமா நான் இருக்கேன்'' என்றாள் ஜானகி.

"ஜானகி! உனக்கேன் இவ்வளவு கோபம்? எப்போ பார்த்தாலும் கோபம், கோபம். ஒரு பொழுதும் சாந்தமே காணவில்லையே!''

"ஆமாம்; சாந்தம். உங்களுக்கு நான் வாக்கப்பட்டதற்கே சாந்தமாகத்தானிருக்க வேண்டும். போயும் போயும் பாழும் பிராம்மணன் உங்களைத் தேடிக் கொடுத்தாரே, அவரைத்தான் சொல்லணும்''

"அவர் என்ன செய்வார்? நல்ல இடமாகத்தான் பார்த்துக் கொடுத்திருக்கிறார். கொடுத்தால்தான் என்ன இப்பொழுது? ஒண்ணும் முழுகிப் போய் விடவில்லை. இந்த ஜாண் வயிற்றுக்காகத்தானே நாம் இந்த பூலோகத்தில் செய்யும் காரியங்கள் முழுதும். வயிற்றுக்கு இல்லாமெ மேலுக்கு வீண் டம்பம் செய்து கொள்வதில் என்ன பிரயோஜனம் சொல்லு?''

"உங்களுக்கு எப்பொப் பார்த்தாலும் வயறே பிரதானம். அந்தப் பாழும் வயிற்றுக்கு ஏதாவது நோவு கூட வரமாட்டேங்கறது. தெருவிலே போனா உங்களுக்கு என்ன தெரிகிறது! எல்லோரும் என்னைத்தானே வையறா. 'என்னடீ ஜானகி! பொறந்த கொழந்தைகளைப் பொறந்த மாதிரியே வச்சிண்டிருக்கே. காதுலே, மூக்குலே ஒண்ணையும் காணோம். அரையிலே உடுத்திக்கொள்ளக்கூடத் துணிகளைக் காணோம். பெரிய பொண்ணுக்குக் கலியாணம் பண்ணற வயசு ஆச்சு; வருகிறவன் எப்படியடி கட்டிக்கொள்ளப் போறான்'னு சொல்றா. இதை எல்லாம் கேட்டு விட்டுத் தலையைக்குனிஞ்சிண்டு வந்து விட வேண்டியிருக்கு. நான் என்ன அவாளுக்குப் பதில் சொல்றது? அவமானம் சகிக்க முடிகிறதில்லை.''

"அவா சொல்றாளேன்னு நாம் சாப்பிடாமெ இருந்துவிடமுடியுமா? அப்படித்தான் நாம் என்ன ஜாஸ்தியாகச் சாப்பிட்டு விடுவது. ஒவ்வொரு வீட்டிலும் சாப்பிடுவதில் பத்தில் ஒரு பங்குகூட நாம் சாப்பிடறது இல்லை.''

"மாதம் நூத்தம்பதில் நூறு ரூபாய் சோத்துச் சிலவுக்கே சரியாய்ப் போய் விடுகிறது. மீதியில், வீட்டு வாடகை, பசங்களுக்குச் சம்பளம் எல்லாத்துக்கும் ஆயிடறது. அங்கங்கே குழந்தைகளைப் பார்த்துவிட்டுத் தானும் அப்படி இருக்கணம்ன்னு அழறதுகள். நீங்கள் எதையும் காதுலேயே போட்டுக்கிறது கிடையாது.''

"ஆமாம்; இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போறது! எல்லாம் அதுலேர்ந்து எடுத்தாத்தானே உண்டு! கடன் வேறே கழுத்தை அறுக்கிறது. சம்பளத்துக்குத் தகுந்த சிலவு செய்தால் நன்னுயிருக்கும். அதைவிட்டு அவாத்திலே அப்படி இருக்கா; இவாத்துலே இப்படி இருக்கான்னு சொல்றத்துலே என்ன பிரயோஜனம்?"

"எதிராத்து ராமையரைப் பாருங்கோ! அவரும் உங்களைப்போல வாத்தியார்தான். உங்களைக் காட்டிலும் சம்பளமும் குறைவு; குழந்தைகளும் அதிகம். இருந்தாலும் அவர் எப்படியோ சம்பளத்துக்கு மேலே மூனு மடங்கு சம்பாதித்து விடுகிருர். புஸ்தகங்கள் எழுதுகிருர்; பத்திரிகைகளுக்கு கதைகள் எழுதுகிருர்; இரண்டு 'ட்யூஷன்' வேறே வச்சிண்டிருக்கார். நீங்களும் அதுமாதிரி ஏதாவது செய்வதற்கு என்ன?"

"சரி ஜானகி! நாளையிலேர்ந்து நான் ஒரு புஸ்தகம் எழுதி, மேல்வரும்படி சம்பாதிக்கலாம்னு தீர்மானம் பண்ணியிருந்தேன். அதற்குத் தகுந்தபடி நீயும் சொல்லிவிட்டே. இனி ஆரம்பித்து விடுகிறேன், தெரிகிறதா? இனிமேல் நீ என்னிடத்தில் வீட்டுக் காரியங்கள் ஒன்றையும் சொல்லக் கூடாது. எல்லாவற்றையும் நீயே கவனித்துக்கொள்ள வேண்டும். வேளைக்கு மாத்திரம் நல்ல கறி காய்களாக வாங்கிச் சமைத்துப் போட்டு விடு. இந்தப் புஸ்தகத்திற்கு வருகிற பணம் முழுவதும் துணி துப்புகளுக்கே செலவழித்து விடுகிறேன். போ, வேலையைப் பாரு!" என்று தம்முடைய அகமுடையாள் ஜானகிக்குத் தைரியம் சொல்லி உள்ளே அனுப்பினுர் வாத்தியார் வரதய்யர்.

வரதய்யர் சியாமளாபுரத்து ஹைஸ்கூலில் வாத்தியார். அந்தக் காலத்தில் கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி எம். ஏ. வரையில் எப்படியோ படித்துவிட்டார். வாத்தியார் வேலைக்கு மனுப் போட்டார்; வேலையும் கிடைத்தது. வேலையானவுடனே கலியாணமும் ஆகிவிட்டது. தஞ்சாவூர் பெரிய வைத்தியநாதய்யர் பெண் ஜானகி. பெண்ணும் சுபாவத்தில் நல்லவள். ஆனுல் கொஞ்சம் முன் கோபி. வெடுக் வெடுக்கென்று அலக்ஷியமாகப் பேசிவிடுவாள். முன்பின் யோசிக்கவே மாட்டாள்.

வரதய்யரும் வேலைக்கு வந்து வருஷங்கள் பதினைந்து ஆயின. வேலைக்கு வரும்போது எண்பது ரூபாய் சம்பளத்தில் வந்தார். இப் பதினைந்து வருஷங்களில் சம்பளமும், நூற்றைம்பதுக்கு வந்தது. அவரும் அரை டஜன் குழந்தைகளுக்குத் தகப்பனுர் ஆனுர். நாலு பெண்கள், இரண்டு பிள்ளைகள்.

வாத்தியார் கொஞ்சம் போஜனப் பிரியர். சாப்பாட்டுக்கு வேண்டிய செலவுகளைத் தாராளமாகவே செய்வது வழக்கம். மீதிச் செலவுகளெல்லாம் அதற்குப் பிறகுதான். இந்த விஷயத்தில் அவர் அகமுடையாள் ஜானகிக்கும், அவருக்கும் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

ஜானகிக்குச் செட்டும் சிருமாகக் குடித்தனம் நடத்திப் பணத்தை மீதிக் கடனைக் கொடுத்துவிட்டு, மீதியைக் குழந்தைகளுக்கு நகைநட்டு செய்து போட்டு, நாலு பேரைப் போலத் தானும் இருக்கவேண்டுமென்பது. அதற்கு முற்றும் மாருனவர் வரதய்யர். இதனுலேயே குடும்பத்தில் அடிக்கடி சண்டை.

அன்று தன் கணவன் புஸ்தகம் எழுதிப் பணம் சம்பாதித்து விடுவதாகச் சொல்லவே, ஜானகிக்குக் கட்டில் அடங்காத ஆனந்தம் பொங்கி வழிந்தது. உடனே அன்றைய தினத்திலிருந்து சாப்பாட்டுச் சிலவுக்கே ரூபாய்

நூற்றைம்பதையும் செலவழித்து வந்தாள். வீட்டு வாடகை கொடுப்பதையும் நிறுத்திவிட்டாள்.

வாதய்யரும் இங்கிலீஷில் புஸ்தகம் எழுத ஆரம்பித்தார். அதற்கு வேண்டிய சங்கதிகள் எல்லாவற்றையும் மனதில் கோர்வை படுத்தி வைத்துக்கொள்ள, மாதங்கள் இரண்டு கடந்தன. பிறகு எழுதுவதற்கு வேண்டிய மை, பேப்பர் முதலியவற்றை வாங்கி வைத்தார். புதிதாகப் பதினேழு ரூபா கொடுத்து 'பார்க்கர்' பேனாவையும் வாங்கினார். எழுதவும் ஆரம்பித்து விட்டார். என்னதான் இறகைக் கட்டிக்கொண்டு பறந்தாலும், தினம் இரண்டு பக்கங்களுக்கு மேல் எழுத முடியவில்லை.

அவருக்குக் கதை எழுதும் நாட்களில் நடந்த உபசாரத்திற்கு அளவேயில்லை. வேளா வேளைக்கு வகை வகையான சாப்பாடு, இரண்டு வேளைகளிலும் காப்பி, டிபன்; இடைவேளைகளில் ஆரஞ்சு, சாத்துக்கொடி ஜூஸ், ஷோடசோபசாரந்தான்.

இப்படியும் அப்படியுமாகப் புஸ்தகத்தை இரண்டு வருஷங்களில் எழுதி முடித்தார் வாதய்யர். ஆனால் அப்பொழுது அவருக்கு ஒரு பெரிய சந்தேகம் உண்டாயிற்று. என்ன சந்தேகம்? தாம் எழுதியஇங்கிலீஷ் நாவலைத் தாமே பிரசுரிப்பதா? அல்லது பிரசுராலயங்களில் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்வதா என்பதுதான். கடைசியில் இரண்டாவது நினைத்ததையே செய்வது என்று தீர்மானித்தார். பின்பு நல்ல பிரசுராலயம் எதுவென்று விசாரித்து, அதற்கு நல்ல வேளை பார்த்து தம் இங்கிலீஷ் நாவல் பிரதியை அனுப்பினார்.

பிரசுராலயத்திற்கு எழுத்துப் பிரதியை அனுப்பியதிலிருந்து வாத்தியாருக்கும், பிரசுராலயத்திற்கும் தபால் போக்கு வரத்துக்கள் பலமாகவே நடந்து வந்தன. மாதங்கள் மூன்று ஆயின. எழுத்துப் பிரதியை அனுப்பியதுதான் தெரியும் ஜானகிக்கு. பிறகு நடந்த தகவல்கள் அவளுக்கொன்றும் தெரியாது. ஆனால் அவள் மட்டும் அடிக்கடி அதைப் பற்றிக் கேட்ட வண்ணமாகவே யிருந்தாள். வாதய்யரும் வேளைக்கொரு சால்ஜாப்பு சொல்லிக்கொண்டு வந்தார்.

திங்கட் கிழமை காலை. மணி பத்து இருக்கும். வாதய்யர் பள்ளிக்கூடம் போக அவசர அவசரமாகச் சாப்பிட்டுக்கொண் டிருந்தார். தெருக் கதவை, 'டக் டக்' என்று தட்டும் சப்தம், உள்ளே பரிமாறிக்கொண்டிருந்த ஜானகியின் காதில் விழுந்தது. 'போஸ்ட்' என்னும் சப்தமும் அதைத் தொடர்ந்தது.

"எங்க அண்ணா புடவை அனுப்பி வைக்கிறேன் என்று எழுதி யிருந்தார். அனுப்பிவிட்டார் போல இருக்கு," என்று சொல்லிக்கொண்டே போய்க் கதவைத் திறந்தாள். தபால்காரன் ஒரு பார்ஸலை நீட்டினான். ஜானகியின் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. கட்டாயம் அண்ணா அனுப்பிவைத்த புடவைதான்! அவளுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. பார்ஸலை நேரே தன்னுடைய கணவனுக்கு எதிரில் வைத்துக் கொண்டு பெருமிதத்துடன் அதைப் பிரித்தாள்.

அவள் எண்ணியதற்கு மாறாக, வரதய்யர் மூன்று மாதங்களுக்குமுன் பிரசுராலயத்துக்கு அனுப்பித்த இங்கிலீஷ் நாவல் எழுத்துப் பிரதி அதனுள் இருந்தது.

"நல்ல மேல் வரும்படி! உங்க கதைதான் திரும்பி வரும்படி ஆச்சு!" என்றாள் ஜானகி.

ஜானகி முறைத்துப் பார்த்த பார்வையில், வரதய்யர் என்ன நினைத்துக் கொண்டாரோ என்னமோ! "வந்து-ஸ்கூலுக்கு நாழியாச்சு ஜானகி. போயிட்டு வரேன்" என்று அசடு வழியக் கூறிக்கொண்டே கம்பி நீட்டினார்.

# வியாபார தந்திரம்

R. S. கோமதிநாயகம்

ராமுவும் நானும் சிநேகிதர்கள். பாலர் வகுப்பு முதல் பத்தாவது வரை ஒன்றாகவே பள்ளியிற் பயின்றவர்கள். பள்ளி வாழ்வு முடிந்ததும் எங்களிருவரையும் வாழ்க்கை வெவ்வேறு துறையில் இழுத்துச் சென்றது. நான் ஓர் ஆபீஸ் குமஸ்தா. சர்க்கார் இயந்திரத்தைச் சுழற்றும் சகடங்களில் ஒன்றானேன். ராமு கவர்ன்மென்ட் உத்தியோகம் கிடைக்காததால் ஒரு மருந்துக் கடையில் கணக்கராக அமர்ந்தான். இவ்வாறாக எங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தை ஆரம்பித்தோம். ராமு உள்ளூரிலேயே வசித்து வந்தான். நான் எல்லாவிடங்களிலும் சுற்றிக் கொண்டு வந்தேன்.

டிசம்பர் மாதம் வந்தது. அதைத் தொடர்ந்து கிறிஸ்துமஸ் விடுமுறையும் வந்தது. நான் ஊருக்கு வந்தேன். வந்தவன் ராமுவைப் பார்க்கப் போனேன். ராமுவுக்கு வருஷம் முன்நூற்றறுபத்தைந்து நாளும் ஓயாத வேலைதானே! கடையில் கிறிஸ்துமஸ் லீவெல்லாம் எது?

‘வா அப்பா வா! எப்ப வந்தே?’ என்று என்னை உபசரித்து உட்காரச் செய்தான் என் நண்பன். அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த ஒருவரிடம் ‘என்ன சார்! என்ன வேண்டும்?’ என்று கேட்டான். வந்தவர் ஒரு சீட்டை நீட்டி ‘இந்த மருந்து வேண்டும். என்ன விலை?’ என விசாரித்தார்.

‘மூணு ரூபா......’

‘என்னய்யா, அங்கே—அந்தக் கடையில் இரண்டு ரூபா தானே சொல்றா?’

‘சொல்லுவா! ஏன் சொல்லமாட்டா? அஞ்சு ஆறு மாதத்திற்கு முன்பே வந்த மருந்தெல்லாம் அடியிலே மண்டி உறைந்து போயிருக்கும். அந்த மருந்தெல்லாம், பாருங்க, ரொம்ப நாளிருந்தா கெட்டுப் போயிடும்?.........ஆனா நம்பகிட்ட......’

‘உம்—சரி. எங்கே, எடுக்கச் சொல்லுங்க பார்ப்போம்’

‘அடே, அந்த......ஒரு பாட்டில் கொண்டாடா!’

ஒரு பையன் ஒரு பாட்டிலை ராமுவின் முன் நீட்டினான். ராமு அப்பாட்டிலை அப்படியும் இப்படியம் திருப்பிப் பார்த்தான். அவ்வளவுதான் ‘அடே யாரடா இந்தப் பாட்டிலை எடுத்து வந்தது. அவன் எங்கே? அவன் தான் கிருஷ்ணன்?’ என இரைந்தான்.

உள்ளே இருந்து ‘என்ன?’ என்று கேட்டுக் கொண்டே முன்னால் வந்து நின்றான் கிருஷ்ணன்.

‘ஏண்டா, நீ அந்தச் சாமான்களை எல்லாம் ‘பாக்’ பண்ணிவிட்டாயா? இங்கு வந்துட்டான் மடப்பயல்! உங்களையெல்லாம் கட்டி மாரடிக்க வேண்டியிருக்கு, ஒரு வேலைசொன்னா, செய்ய ஒன்பது மணிநேரம். இந்த பாட்டிலை அவன் எடுத்துக் கொடுக்க மாட்டானோ? நீ வந்துட்டே அங்கேருந்து!’ எனக் கத்தினான்.

அப்படி அவன் ஒவ்வொரு வார்த்தை சொல்லும் பொழுதும் கையை பலமாக அப்பையனுக்கு முன்னே நீட்டி நீட்டிப் பேசினான். கொஞ்சம் வழுக்கினால் போதும். அப்பையன் முகத்திற்கே ஆபத்துத்தான்.

'மெள்ள அப்பா மெள்ள! பையன் மூக்குப் போயிடப் போறது' என்றேன்.

'அதில்லை—இந்தப் பய எப்போதும் இப்படித்தான். போடா உள்ளே, போ! அந்தக் கேஸை ஜல்தியா பாக் பண்ணு போ!' என்று கத்தி, அவன் போகா விட்டால் அவன்மேல் அந்தப் பாட்டிலை வீசி விடுபவன் போல் கையை ஆட்டினான்.

கிருஷ்ணன் 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று உள்ளே போய்விட்டான். 'மடப்பயல்கள்! சார்; நீங்க இதைப் பாருங்கோ!' என்று பாட்டிலைக் கூட்டினுள்ளிருந்து எடுத்துக்காண்பித்தான். வந்தவர் அதை வாங்கிப் பார்த்து சந்தோஷித்து புதிதாக வந்தது தானே?' என்றார்.

'அதிலே சந்தேகமா?......அடே! அந்தப் பய கேஸை அடுக்கறானான்னு போய்ப் பாரு!'

ரூபாய் மூன்றும் அணா எட்டும் கொடுத்துவிட்டு மருந்து வாங்க வந்தவர் பாட்டிலுடன் சென்றார். உள்ளேயிருந்து சிரித்துக் கொண்டே கிருஷ்ணன் சில பாட்டில்களைத் தூக்கிக் கொண்டு வந்தான். 'என்ன, அதற்குள்ளாகவா பாக் பண்ணியாச்சு?' என்று கேட்டேன்.

'பாக்கிங்காவது, மண்ணாங்கட்டியாவது! இதெல்லாந்தாண்டாவேலை! அந்த மருந்து கொஞ்ச நாளானதுமே உறஞ்சு போயிடும். அவரிடம் நான் பெருமையா நம்ம மருந்தைப் பற்றிச் சொல்லிவிட்டேன். பிறகு அவன் திறந்து பார்த்து விஷயம் வெளியாகாமலிருக்கத்தான் இந்நாடகம். நான் அவனைத் திட்டும் பொழுதெல்லாம் பாட்டிலை ஆட்டி ஆட்டிப்பேசினேனே! எல்லாம் மருந்து ஒன்று சேருவதற்குத்தான்......' என்று சொல்லிச் சிரித்தான்.

'நல்ல வியாபாரமும் தந்திரமுமப்பா!' என்றேன் நான்.

'என்ன செய்யச் சொல்றே? பிழைப்பு அப்படியிருக்கு. வயிற்றுப் பிழைப்பிற்குத்தானே இந்த நடிப்பெல்லாம்!" எனமொழிந்தான் என் நண்பன் ராமு.


## புதிய சகாப்தம்?

வாழ்க்கைப் பாதை சிற்றின்பம், ஆசை, காமம் முதலிய படுகுழிகள் நிறைந்தது. வாலிபர்கள் அவைகளில் தடுமாறி விழுகின்றனர்.

இதனால் அவர்களுக்குப் பயங்கரமான வியாதிகள் ஏற்பட்டு அவர்கள் வாழ்க்கையே இருளடைந்து போகிறது.

வாலிபர்களின் குற்றங்களுக்கு பிராயச்சித்தம் செய்து வாழ்க்கையில் புதிய சகாப்தத்தை உண்டாக்குவது ஒன்றே ஒன்று. அதுதான் 'VEGAROL' இச் சஞ்சீவியின் விலை ரூ. 2-8-0

முன் பண மனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

**RAJAR & CO.,**
**32, Errabalu Chetty St., Madras.**

# கிழவர் கதை

(மாயாவி)

தாம்பிரவருணி நதிக்கரையிலுள்ள அந்த மடத்தில் அவர் ஒரு வாரமாகக் காணப்படுகிறார். அந்த மடத்தைவிட்டு அவர் வேறெங்கும் வெளியே போவதில்லை. எப்பொழுது பார்த்தாலும் பித்துப் பிடித்தவர்போல ஏதோ சிந்தித்துக் கொண்டிருப்பார். சில சமயம் சிந்தனை முற்றிக் கண்ணீர் விடுவதும் உண்டு. ஊரில் எல்லோரும் அவரைப் பைத்தியமென்று நினைத்தார்கள்.

நான் குளிக்கப்போகையில் தினமும் அவரைப் பார்ப்பதுண்டு. அவருக்கு வயது கிட்டத்தட்ட அறுபதிருக்கும். ஒடிந்து விழும்படியான ஒத்தை நாடி சரீரம். தாடிக்குள் மறைந்திருக்கும் அவர் முகம் எனக்கு அறிமுகமானதாகக் காணப்பட்டது.

அன்று நான் குளித்துவிட்டு வரும்போது அவர் என்னைக் கண்கொட்டாமல் பார்த்தார். நான் சிறிது தூரம் போனதே, அவர் என்னைக் கையைத் தட்டிக் கூப்பிட்டார்.

நான் திரும்பிவந்தேன். "அப்பா உன் பெயரென்ன?" என்று கேட்டார். மிதமிஞ்சிய துக்கத்தால் அவர் குரல் கம்மியிருந்தது.

"என் பெயரா? சீனு" என்றேன்.

"என்ன! சீனுவா! நீ பத்தமடை ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தாயோ?" என்றார்.

எனக்கு அவர் யாரென்று தெரிந்துவிட்டது. "நான் அங்கேதான் படித்தேன். நீங்கள் தமிழ் பண்டிட் முரளீதரய்யர் இல்லையோ" என்று கேட்டேன்.

"ஆமாம் அந்தப் பாவிதான்" என்றார்.

"ஸார் நீங்களா? இந்தக் கோலத்தில் எப்படி?" என்றேன். ஆச்சரிய மிகுதியால் நாக்கு தடுமாறிற்று

"அப்பா சீனு! அதை அப்புறம் சொல்கிறேன். எனக்குப் பசி காதை அடைக்கிறது. முதலில் ஒருவேளை சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்" என்று கெஞ்சும் குரலில் கேட்டார்.

அவரை வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் சாப்பாடு பண்ணி வைத்தேன்.

## 2

நான் பத்தமடை ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கும் வரையில், என்னுடைய ஜாகை, சாப்பாடு எல்லாம் முரளீதரய்யர் வீட்டில் தான். அவர் என் தகப்பனாரின் பிராண சிநேகிதர். ஸ்கூலில் எல்லாப் பையன்களும், முக்கியமாக அவரிடம்தான் அதிக பயபக்தியுடன் நடந்துகொள்வார்கள். ஆமாம், அவருடைய சாந்தமான குணம், என்னைமாத்திரமல்ல, எல்லா மாணவர்களையுமே வசீகரித்திருந்தது.

அவருடைய பெண் பத்மா—சிகப்பாய், ஒல்லியாய் இருப்பாள். கூந்தல் கணுக்கால் வரையில் தொங்கும். புன்சிரிப்புடன் கூடிய அவள் முகம் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சி மிகுந்ததாக இருக்கும். ரொம்பசாது; நல்ல புத்திசாலி.

தாயில்லாக் குழந்தையாகிய பத்மாவை தன் உயிரைவிட மேலாகக் கருதி

யிருந்தார் முரளீதரய்யர். நிறைய வரதக்ஷிணை, சீர், செனத்தி எல்லாம் கொடுத்து, தஞ்சாவூரில் ஒரு பெரிய பணக்கார இடத்தில் அவளைக் கலியா ணம் செய்து கொடுத்தார்.

நான் ஹைஸ்கூல் படிப்பை முடித் துக்கொண்டு, காலேஜில் வந்து சேர்ந்த வருஷம் பத்மா புக்ககம் போனாள். முரளீதரய்யர் தன் வேலையை ராஜீநாமா செய்துவிட்டு அவளுடன் தஞ்சாவூருக்குப் போய் விட்டார்.

## 3

**சா**ப்பாட்டை முடித்துக் கொண்டு ரேழியில் வந்து உட்கார்ந் தோம்.

"ஏன் ஸார், பத்மா சவுக்கியமா?" என்று கேட்டேன்.

அவர் கண்களில் கண்ணீர் நிறம் பிற்று.

"என் பத்மா.........போய்விட்டா ளப்பா" என்று விம்மிக் கொண்டே பதிலளித்தார்.

"என்ன பத்மாவா?...எப்போது?" என்றேன்.

"அது......ஆயிற்று. கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழிந்துவிட்டது. சாவ தற்குமுன் அவள் உலகில் துன்பம் ஒன்று மில்லாமல் அநுபவித்துவிட் டாள்" என்றார்.

அதற்குமேல் அவரால் பேசமுடி யாதபடி துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. வழிந் தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே மறுபடியும் சொன்னார்.

"பத்மா புக்ககம் போன இரண்டு வருஷத்திற்குள் ஒரு ஆண்குழந் தையைப் பெற்றுக் களிப்படைந்தாள். புருஷனும், மனைவியும் குழந்தை யுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்வதைக் கண்டு ஆனந்த மடைந்தேன்.

துரதிர்ஷ்டக்காரன். என் சந் தோஷமே அவர்கள் மூவர் வாழ்விற் கும் யமனாயிருந்தது போலும்.

யாரோ ஒருவருடைய யோசனையைக் கேட்டுக்கொண்டு ஒரு சினிமாப் படம் பிடிக்க ஏற்பாடு செய் தான் அவன் கணவன். நானும் பத்மாவும் எவ்வளவோ வேண்டா மென்று சொன்னோம். அவன் ஒரே பிடிவாதமா யிருந்ததால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சொத்துக்களை யெல்லாம் விற்றுப் பணமாக்கிக்கொண்டு நடிகர் கோஷ்டி யுடன் கல்கத்தாவுக்குப் புறப்பட்டான். எங்களையும்கூட அழைத்துப்போகும் படி சொன்னோம். நாங்கள் கண்டிப் பாக அவனுடன் வரக்கூடாது என்று சொல்லிவிட்டான்.

யாரோ சாந்தாவாம். ஒரு தேவடி யாள்; அவளும் ஒரு நடிகை. அவள் வலையில் இவன் விழுந்துவிட்டான். பிறகு கேட்பானேன்! குடியும் சேர்ந்துகொண்டது. நாளடைவில் கைப்பணமும் கரைந்து கடனும் ஏறிற்று. எப்படியோ படத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும் பினான்.

ஊருக்கு வந்த பிறகுதான் அவன் கெட்ட நடவடிக்கைகள் எங்களுக் குத் தெரிந்தது. நானும், பத்மாவும் அவ்விரண்டையும் விட்டு விடும்படி கெஞ்சாதவண்ணம் கெஞ்சினோம். அவன் மண்டையில் ஏறவில்லை. நாளுக்கு நாள் அவள் மோகமும், குடியும் அதிகமாகிக் கொண்டிருந்தன.

இவ்வளவும் ஆயிற்றே. பிடித்த படமாவது வெற்றியடைந்ததா! அது வும் இல்லை. படம் ஓடிய இடத்தி லெல்லாம் நஷ்டம். படத்தை நம்பிக்

கடன் கொடுத்தவர்கள், கோர்ட் நடவடிக்கை எடுத்து வாரண்ட் கொண்டுவந்து விட்டனர்.

மானம் போகாமலிருக்க பத்மாவின் நகைகளையும், என் சொத்துக்களையும் விற்றுக் கடனை அடைத்தேன்.

அதன்பிறகும் அவன் நல்வழிப்படவில்லை. மறுபடியும் பழைய லீலைகள் தான். குடியிருந்த வீடு ஒன்றிருந்தது. அதையும் அவன் கைவசப் படுத்திக் கொண்டு, இருவருமாக எங்களை அங்கிருந்து துரத்திவிட்டனர்.

பத்மா தன் கணவனைவிட்டுப் பிரிய மனமில்லாதவளாகவே இருந்தாள். "நான் செத்தாலும், அவர் காலடியில் என் பிராணனை விடுவேனே தவிற, அவரைவிட்டு வேறெங்கும் வரமாட்டேன்'' என்றாள்.

நான்தான் அவளைக் கட்டாயப் படுத்தி அங்கிருந்து அழைத்து வந்தேன். பக்கத்திலிருந்த ஒரு ஊரில் சில பையன்களுக்குப் பாடம் கற்பித்துக் கொடுத்து எங்கள் காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தோம்.

## 4

தன் கணவனைப் பற்றிய கவலையாலும், அவனைப் பிரிந்த ஏக்கத்தினாலும், பத்மாவின் தேகம் இளைத்துத் துரும்பாய்விட்டது. தேறுதல் வார்த்தைகள் அவளுக்கு யாதொரு பலனையும் கொடுக்கவில்லை. எப்பொழுதும் கண்ணீர் விட்டபடியே இருந்தாள்.

விதிச்செயலை யாரால் வெல்லமுடியும்? ஏற்கெனவே துக்கத்தில் மூழ்கித் தவித்துக் கொண்டிருந்த பத்மாவுக்கு, மற்றொரு மாற்றமுடியாத துக்கமும் வந்து சேர்ந்தது. அமோகமான குடியாலும், கெட்ட நடவடிக்கையாலும் அவள் புருஷன் இறந்தான்.

கணவனை இழந்தபிறகு, பத்மா நெடுநாள் உயிருடன் இருக்கவில்லை. ஒரு மாதத்திற்குள்ளாக, குழந்தையையும், என்னையும் தவிக்கவிட்டுப் போய் விட்டாள்.

வாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட எனக்குக் குழந்தையைக் காப்பாற்றும் பாரமும் வந்து சேர்ந்தது. மனத்திற்கு சாந்தி ஏற்படுவதற்காக, குழந்தையுடன் ஊர் ஊராகச் சுற்ற ஆரம்பித்தேன். பத்மாவை இழந்த துக்கத்தை ஒருவாறு மறந்து குழந்தையின் முகத்தைப் பார்த்து ஆனந்தமடைந்திருந்தேன்.

அந்த அற்ப சந்தோஷத்தைக்கூட நெடுநாள் நான் அடையக் கொடுத்து வைக்கவில்லை. இதோ பக்கத்தூரில் போனவாரம், இதே தாம்பிரவருணி அவனை விழுங்கிவிட்டது. நான் மாத்திரம் இன்னும் உயிருடன் இருக்கிறேன். என் எல்லையற்ற துக்கத்தை எத்தனை காலம் அநுபவிக்க வேண்டுமோ தெரியவில்லை'' என்று சொல்லி முடித்து ஜன்னல் வழியாக தூரத்தில் ஓடிய தாம்பிரவருணியை வெறித்துப் பார்த்தார்.

என் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, நானும் நதியைப் பார்த்தேன். ஆனால் தாம்பிரவருணியின் புது வெள்ளம், சுழன்று, சலசலவென ஓசை செய்து கொண்டு ஓடுவது எங்களைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

# நாயும் பூனையும்

"மூர்த்தி"

பூனைக்கும் எலிக்கும் ஏன் ஜன்மப் பகை என்று தெரியுமா? சொல்வதைக் கேளுங்கள்! ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் ஒரு நாயும் பூனையும் இருந்தன. அவைகளை அந்தக் குடியானவன் அன்புடன் வளர்த்து வந்தான். நாயும் பூனையும் மிகவும் சிநேகிதமாய் இருந்து வந்தன.

ஒருநாள் அந்தக் குடியானவன் அவன் மனைவியிடம் நல்ல பணியாரம் ஏதாவது பண்ணும்படி சொல்லி விட்டு வேலைசெய்ய வயலுக்குப் போய்விட்டான். குடியானவன் மத்தியான சாப்பாட்டிற்கு 12-மணிக்கு வந்து விடுவானாதலால், அவன் மனைவியும் தயாராக நல்ல பணியாரம் பண்ணி ஒரு பாத்திரத்தில் வைத்து விட்டு கொஞ்ச தூரத்திலுள்ள குழாய்க்கு ஜலம் கொண்டு வரலாமென்று போனாள்.

எஜமானி வெளியில் போவதை நாயும் பூனையும் கவனித்துக் கொண்டிருந்தன. அவைகளிரண்டுக்கும் நல்ல பசி! சமையலறையிலிருந்து வந்த பக்ஷண வாசனை அவைகளின் மூக்கைத் துளைத்துக் கொண்டு போயிற்று. ஆகவே எஜமானி அம்மாள் வருவதற்குள் அந்தப் பக்ஷணத்தை ஆளுக்குப் பாதியாக சாப்பிட்டு விடலாமென்று, இரண்டும் உள்ளேசென்றன. முதலில் பூனை அதன் காலால் பக்ஷணம் வைத்திருந்த பாத்திரத்தை மெதுவாக உருட்டி விடவும், அதிலிருந்த பக்ஷணமெல்லாம் கீழே கொட்டிப் போயிற்று. பிறகு இரண்டும் சௌகரியமாக அந்தப் பக்ஷணம் முழுவதையும் காலி செய்து விட்டு சந்தோஷமாக வெளியில் வந்தன.

ஆனால், அவைகளுக்குப் பிறகு தன் எஜமானி அம்மாள் வந்து பார்த்தால் நன்றாக உதை கிடைக்கும் என்ற பயம் உண்டாயிற்று. ஆகவே, எஜமானி வருவதற்குள் ஓர் இடத்தில் போய் ஒளிந்து கொண்டு விடலாமென்று இரண்டும் அங்கேயும் இங்கேயுமாக ஓடின. சரியான இடமாக ஒன்றும் அகப்படவில்லை.

கடைசியில், பூனைமட்டும் தந்திரமாக அந்த வீட்டின் கூரையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டது. நாய் தன்னைத் தனியாக விட்டு விட்டுப் போக வேண்டாமென்று எவ்வளவோ கெஞ்சியும், பூனை அதைப்பற்றி கவனிக்கவில்லை. தான் மட்டும் தப்பித்துக் கொண்டால் போதுமென்று அது பேசாமல் இருந்து விட்டது. ஆனால், பாவம்! நாய்க்கு ஒளிந்து கொள்ள நல்ல இடம் ஒன்றும் கிடைக்க வில்லை. எஜமானி வரும் சமயமாகி விட்டதால்,

அது கடைசியில் மாட்டுக் கொட்டகையில் போய்த் தூங்குவது போல் பாசாங்குடன் படுத்துக் கொண்டது.

நிற்க, குழாய்க்குப்போன குடியானவன் மனைவி வீட்டிற்குத் திரும்பி வந்து பார்த்தாள்! சமயலறையில் அவள் செய்து வைத்து விட்டுப்போன பணியாரத்தைக் காணுமல் அப்படியே திகைத்துப் போய் விட்டாள். பாத்திரம் மட்டும் காலியாக ஓரிடத்தில் உருண்டு கிடந்தது! உடனே அவளுக்கு, தான் வெளியில் போயிருந்த சமயத்தில் நாயும் பூனையும் தான் திருடித் தின்றிருக்க வேண்டுமென்று தோன்றிற்று. உடனே கையில் ஒரு தடியை எடுத்துக் கொண்டு வீடு முழுவதும் அவைகளைத் தேடினுள்.

அந்தச் சமயத்தில் குடியானவனும், தன் மனைவி நல்ல பணியாரம் பண்ணி வைத்திருப்பாளென்று ஆவலுடன் அங்கு வந்து சேர்ந்தான். ஆனல் அவன்மனைவி தான்பண்ணிவைத்த பணியாரத்தையெல்லாம் நாயும் பூனையும் திருட்டுத் தனமாய்த் தின்று விட்டு எங்கேயோ ஓடிப்போய் விட்டன வென்று சொல்லவும், ஏமாற்றமடைந்த குடியானவனுக்கு அவைகளின் பேரில் கோபம் அசாத்யமாய் வந்து விட்டது. இனிமேல் அந்தத் திருட்டுப் பிராணிகள் கால்களை ஒடித்து வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டியதுதான் என்று அவன் மனைவியிடமிருந்து அந்தத் தடியை வாங்கிக்கொண்டு அவைகள் வரட்டுமென்று காத்திருந்தான்.

சிறிது நேரம் கழித்துக் குடியானவன் ஏதோ காரியமாக மாட்டுக் கொட்டகைப்பக்கம் போக நேர்ந்தது. அங்கே புல்லுக்கடியில் நாய் மட்டும் திருட்டுவிழி விழித்துக்கொண்டு ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். நாயும் குடியானவனைக் கண்டதும் பயந்து தப்பித்துக் கொண்டு போய் விடலாமென்று ஓட ஆரம்பித்தது. ஆனல் அதற்கு வெளியே போக வழியில்லாமல் குடியானவன் கையில் சிக்கிக் கொண்டு விட்டது. உடனே அவனுக்கிருந்த கோபத்தை யெல்லாம் சேர்த்து நாயை அங்கேயே அந்தத் தடியால் அரை உயிராக அடித்து வெளியில் துரத்தி விட்டான்.

இதையெல்லாம் சிரித்தவாறே கூரையின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த கெட்டிகாரப் பூனை, "இனிமேல் நாம் இங்கு இருந்தால் நமக்கும் இதேகதிதான் கிடைக்கும்" என்று எங்கேயோ ஓட்டம் பிடித்தது.

பாவம்! அடிபட்ட நாய் நடக்கமுடியாமல் ஓரிடத்தில் விழுந்து விட்டது. அதற்கு பூனைதான் சொல்லிக் கொடுத்துத் தனக்கு அடிவாங்கிவைத்து விட்டு, அது தப்பித்துக் கொண்டு விட்டதென்று, எரிச்சல் எரிச்சலாக வந்தது. நாய் பூனையைக்கண்டால் அதற்கு வரும் கோபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அன்றையதினத்திலிருந்து, பூனை அதற்கு ஜன்ம சத்ருவாகி விட்டது. அதனல்தான் இன்றைக்கும் நாய் பூனையைக் கண்டால் கோபத்துடன் துரத்திக் கொண்டு ஓடுகிறது.

# சினிமா வம்பு

(தேனீ)

தமிழ்பட உலகிற்கு ஹிந்துஸ்தான் பிலிம்ஸாரின் 'விமோசனம்' வரப் போகிறது, என்று வெகு நாட்க ளாக எல்லோரும் சொல்லிக் கொண் டிருந்தார்கள். நானும் வழிமேல் விழி வைத்து அதை வரவேற்கக் காத்திருந்து சலித்துப் போய்விட் டேன். கடைசியில் என் மனக் குறையும், பட உலகின் மனக்குறை யும் ஒழியுமாறு மார்ச்சு 30-ந் தேதி 'விமோசனம்' வந்தே வந்துவிட்டது. இனி தமிழ் நாட்டுக்கு விமோசனம் என்பதில் ஏன் சந்தேகம்?

கத்தை தண்டபாணி பிலிம்ஸார் சினிமாவுக்குள் பிடித்துப் போட்டது மன்றி ஏப்ரல் மாதக் கடைசியில் அவரை அம்பலத்துக்கும் கொண்டுவர உத்தேசித் திருக்கிறார்களாம்.

*   *   *

அஸந்தாஸ் கம்பெனியார் முன்பு நந்தனாரை எடுத்து நம் காதுகுளிர ஒரு சங்கீத விருந்தை ஏற்படுத்தினர் கள். இப்போது ஏராளமான பணச் செலவில் 'மணிமேகலை'யை எடுத்து



'இம் மென்னும் முன்னே எழு நூறும், எண்ணூறும், அம் மென்றால் ஆயிரம்பாட்டாகாதோ!' என்று கவி காளமேகம் அதிமதுரத்திடம் வாதிட் டார். கடைசியில் எமகண்டம் பாடி அந்த மதுரத்தைத் தோற்கடித்தார். அப்படிப்பட்ட கவிராஜ காளமே

நமக்கு முன்னதைக் காட்டிலும் அதிமதுரமான சங்கீத விருந்தை அளித்துவிட்டனர். இந்தக் கதை கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையைப் பற்றியதாகும். கோவலன் பாண்டிய அரசனால் மரண தண்டனை அடைந்த செய்தியைத்

கேட்ட மாதவி உலக ஆசைகளை வெறுத்து பௌத்த தர்மப்படி வாழ்க்கையை நடத்துகிறாள்.

மணிமேகலையும் தன் தாயாரைப் பின்பற்றி பக்தியில் ஈடுபடுகிறாள். பருவ காலத்துக்குறிய விளையாட்டுகளை மறந்துவிடுகிறாள். ஒரு நாள் மாதவியின் பூஜைக்குப் புஷ்பம் எடுக்க மணிமேகலை நந்தவனம் செல்கிறாள்.

அவ்வூர் அரசன் மகன் உதய குமாரன் அங்கேவந்து மணிமேகலையைத் தான் காதலிக்கும் விஷயத்தை அறிவிக்கிறான். மணிமேகலையின் தோழி தந்திரமாக அரசகுமாரனை அனுப்பி விடுகிறாள்.

பின்பு சக்ரவாளத் தோட்டத்து வழியாக வீட்டுக்கு வருகையில் அவர்களுக்கு வழி தெரியாமல் போய்விட்டது. இதனால் அவர்கள் அன்றிரவு அங்கேயே படுத்துக் கொண்டனர்.

நடு இரவில் மணிமேகலா தெய்வம் அங்கு தோன்றி மணிமேகலையைத் தூக்கிச் சென்று மணிபல்லவம் என்னும் தீவில் விட்டுவிடுகிறது.

தூக்கத்திலிருந்து விழித்த மணிமேகலைக்கு புத்த பீடத்தின் தரிசனம் கிடைக்கிறது. பின் அதே தீவிலிருக்கும் தீபதிலகை என்ற தெய்வம் ஒரு அட்சயபாத்திரத்தைக் கொடுத்து மறைகிறது.

மணிமேகலை சில தினங்களில் தன் ஊர் அடைந்து சந்நியாசினி வேஷத்தில் அட்சயபாத்திரத்தால் ஏழைகளின் பசிப்பிணியை அகற்றி வருகிறாள். அவ்விடத்திற்கு அரசன் மகன் வந்து மீண்டும் தன் காதலை வெளியிட மணிமேகலை புத்தி சொல்லி அனுப்புகிறாள்

எனினும் உதயகுமர்ரனின் மனம் மாறவில்லை. இத்தொந்தரையிலிருந்து நீங்க மணிமேகலை காயசண்டிகை என்ற கந்தர்வமாதுபோல் வேடமணிந்து இரவில் சம்பாபதி கோவிலுக்குச் செல்கிறாள்.

அவ்விடத்திலும் உதயகுமாரன் வந்து மணிமேகலையுடன் வாதிடுகிறான். அவ்விடத்திற்கு வந்த காயசண்டிகையின் கணவன் தன் மனைவியைத்தான் அரசன் மகன் வற்புறுத்துவதாக எண்ணி அவனைக் கொலை செய்து விடுகிறான்.

இதனால் மணிமேகலை குற்றவாளியென்று கைது செய்து சிறையில் வைக்கப்படுகிறாள். கடைசியில் பல



மனமாளிகையில் நடிக்கும்
பி. எஸ். சீனிவாச ராவ், பி. எ.,

கஷ்டங்களுக்கிடையில் மணிமேகலை நிரபராதியென்று நிரூபிக்கப்படுகிறாள். பின்பு அவள் டத்த பிக்ஷுணியாக மாறி விடுகிறாள். இதுதான் கதையின் சுருக்கம். ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாள் திறமையுடன் நடித்த இப்படம் எல்லாவகையிலும் முன்னணியில் இருப்பதாய்த் தெரிகிறது.

*    *    *

இதோ இங்கிருக்கும் ஆசாமியை உங்களுக்குத் தெரிகிறதா? இவர் பெயர் S. G. கிருஷ்ணமூர்த்தி



பிள்ளை. பொள்ளாச்சிக் கருகில் உடையார் குளத்தில் பிறந்தவர்.

இவருடைய தந்தை ஒரு பிரபல சங்கீத விற்பன்னர். ஆகவே இவருக்கும் அந்த வாசனை இல்லாமலாபோய் விடும். தன் தந்தையிடமும், இன்னும் பல பண்டிதர்களிடமும், இவர் தமிழ்க் கல்வியையும், இசைக் கல்வியையும், இளமை முதற்கொண்டே கற்று வெகு பாண்டித்யம் பெற்றவர்.

கோவை, திருச்சி முதலிய இடங்களில் சபாக்களை ஏற்படுத்தி அதன் மூலம் நூற்றுக் கணக்கான சங்கீத இளைஞர்களைத் தமிழ் நாட்டுக்கு அளித்தவர் இவர்.

சென்ற நான்கைந்து வருடங்களாகத் தன் பணியை சினிமாத் துறையில் ஆற்றிவருகிறார். பாட்டு, வசனம் எழுதுவதில் மிகவும் தேர்ந்தவர். ‘என் காதலி’ ‘அசட்டு மாப்பிள்ளை’ ‘பாக்யதாரா’ ‘தானசூரகர்ணு’ இவைகளுக்கும் பாட்டு, வசனம் எழுதியுள்ளார். இப் படங்களுக்குச் சங்கீத டைரெக்டரும் இவர்தான்.

*    *    *

சரித்திரப் படங்கள் அதிகமாக வெளிவரவில்லையே என்ற குறையை நிவர்த்தி செய்ய ட்ரினிடி பிக்சர்ஸ்ஸார் இப்பொழுது ‘சந்திரகுப்த சாணக்கியா’ என்ற படத்தை எடுத்துவிட்டனர். படம் வெகு வெற்றியுடன் விரைவில் வெளியிடப்படுமாம்.

*    *    *

ஸ்யாமளா பிக்சர்ஸாரின் மலையாளப்படமான ‘ஞானம்பிகை’ எல்லாம் முடிந்துவிட்டதாம். அனேகமாய் அடுத்தவாரம் வெளிவரலாம். இவர்களுடைய இன்னொரு தமிழ் படமான ‘வேதவதி’ ஷூட்டிங் நடந்துகொண்டிருப்பதாய்த் தெரிகிறது. இலங்கை ரேடியோபுகழ் K. தவமணி தேவி இதில் பிரதம பாகத்தை வகிக்கிறார்.

*    *    *

‘மனமாளிகை’ என்பது ஒரு சமூகப் புராணப்படமாம். ‘பிரதாப் பிக்சர்ஸ்’ஸார் தான் இந்த ‘மனமாளிகை’யின் ஸிருஷ்டி கர்த்தாக்களாம். இது

வெகு மும்மரமாகப் படம் பிடிக்கப் பட்டு வருவதாகக் கேள்வி.

*　　*　　*

ஒரு பெண் தன்னந் தனியே சமூகத்தை எதிர்க்கிருள். புருஷனின்றி வாழ்க்கையை நடத்த முற்படுகிருள். அப்படியானல் அவள் எவ்வளவு தைரிய சாலியாய் இருக்கவேண்டும்! இவளைப் பற்றிய கதைதான் 'ஜிந்தகி' நியூ தியேட்டர்ஸில், ஸ்ரீ பருவா இதை வெகு அற்புதமாக ஸிருஷ்டித்திருக்கிருராம். இது ஒரு வெற்றியுள்ள படம் என்பதற்கு, இதில் ஸைகாலும், ஜமுனவும் நடித்திருப்பதே ஒரு அத்தாட்சி. இப்படம் முடிந்து காட்சிக்குத் தயாராய் விட்டதாம்.

*　　*　　*



ஐரோப்பாவுக்கு சமீபமாயுள்ள கடல்களில் பெரிய மீன்களைக் கூடப் பக்ஷணம் பண்ணும் நீர்ப்பூச்சிகள் இருக்கின்றனவாம்.



'மணிமேகலை'யில் கொத்தமங்கலம் சீனுவும், வி. எஸ். சுலோசனவும்.



# ஆரோக்ய அரங்கம்

By Lgr. S. NATARAJAN. Weight-Lifter, Coimbatore

**நா**ம் சாப்பிடும் ஆகாராதிகளில் ஜலம், கார்போஜடிரேட், ப்ரொடீன், கொழுப்பு முதலியவைகளிருக்கின்றனவென்று முன்பு சொன்னேன். வைட்டமின்களைப் பற்றியும் தெரிந்துகொண்டோம். நாம் தேகவலிமை அடைவதற்கும், தேகத்தில் உஷ்ணம் உண்டாகி, அதன் காரணமாக நாம் சகல வேலைகளைச் செய்வதற்கும் ஏதுவாயுள்ளது ஆகாரம்தான். உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளுக்கும், ஆகாரம் மிகவும் அவசியம். ஜீவனுள்ளவை தானாகவே அசையும். உயிருள்ள ஓர் பிராணிக்கும், உயிரில்லாத ஓர் வஸ்துவுக்கும் இதுதான் ஓர் முக்ய வேற்றுமை. நாம் செய்யும் ஒவ்வொரு வேலையினாலும், உடம்பில் கொஞ்சம் தளர்ச்சி ஏற்படும். உதாரணமாக, ஓடுதல், நடத்தல், நிற்றல், பளுவு தூக்குதல், ஏதாவது விளையாடுதல் முதலியவைகளை நாம் செய்கிறோம். இதனால் சில அங்கங்கள் தளர்ச்சி அடைகின்றன. தேகத்தில் ஓர் மாறுதலுண்டாகும். ஆகையால் இந்தத் தளர்ச்சியைப் போக்கி, அவைகளுக்கு புஷ்டியைக் கொடுக்கும் ஆகாராதிகளை சாப்பிடவேண்டும்.

பசியும் தாகமும், ஆரோக்யமுள்ள ஒருவனுக்கு மிகவும் சீக்கிரத்திலுண்டாகும். ஆகாரத்தின்மேலும் விருப்பமேற்படும். பின்னர் ஆகாரம் உட்செல்ல, தேக வளர்ச்சியேற்படும். ஆனால் எவ்வளவு ஆகாரம் உட்கொண்ட போதிலும், மனிதனுடைய எடை மாத்திரம் வித்யாசமின்றியிருக்கும். ஏனென்றால், சாப்பாட்டிற்குத் தகுந்த வேலையை அவன் செய்கிறான். பொதுவாக ஆகாரத்திற்கு, வேண்டிய வகை என்றும், வேண்டாத வகை என்றும் இருவகையாகக் கூறப்படுகிறது. உதாரணமாக, தேனீர் காப்பி, பாதாமி, மிந்திரிப்பருப்பு, மிளகு, கசகசா, சுக்கு, ஏலக்காய், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குங்குமப்பூ முதலியவைகளைக்கொண்டு தயாரிக்கப்படும் பானங்களும், தங்கபஸ்மம் மற்றுமுள்ள போதையைத் தரும் பானங்களும்,முக்யமாக (Accessory foods luxuries) வேண்டாத பதார்த்தங்கள் எனலாம்.

மீன் முதலியவைகளை மனிதர்கள் புசிக்கிறார்கள். அதன் தேகத்திலுள்ள சதையில் வெள்ளை நிறமுள்ள (Allumen) பால்போன்ற வஸ்து இருக்கிறது. சதையும் கட்டுமஸ்தாயும் (Filrin) நூலிழை போன்றுமுள்ளது. தவிர தண்ணீரில் கரையக்கூடியதாயும் (Gelatine) குளிருக்குத் தகுந்தாற்போல் கல்மாதிரி ஆகக்கூடியதாயுமுள்ளது. இதைச் சாப்பிட்டால் தேகத்திற்கு வலிமை ஏற்படாது. ஆனால் இதைச் சீக்கிரம் ஜீரணம் செய்யலாம். பறவைகளிலும், கால் நடைகளிலுமுள்ள சதைப்பற்றைக் காட்டிலும் மீனின் சதைப்பற்று அவ்வளவு விசேஷமானதல்ல என தெரியவருகிறது. இந்தியர்கள் இதனால்தான், தயிர், நெய், கொழுப்பு, எண்ணெய் முதலியவைகளுடன் சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். காட் என்ற மீனின் ஈரலைக் கொண்டு தயாரிக்கப்படும் எண்ணெய் தேகத்

திற்குப் புஷ்டியைத்தரும். வைட்டமின் D. (Vitamin D) இதிலிருக்கிறது.

கொழுப்பு மிகவும் வலிமையைத் தரும். ஆனால் ஜீரணம் செய்வது மாத்திரம் மிகவும் கஷ்டம்; ஏனென்றால் அது கெட்டியானது. மாமிஸத்தை சீக்கிரம் ஜீரணம் செய்யலாம். வலிமையையும், மூர்க்கத்தனத்தையும் தரக்கூடிய வஸ்துக்களுமுண்டு. பறவைகளின் சதைப்பற்றை மனிதர்கள் ஆகாராமாக உட்கொள்ளுகிறார்கள். வலிமை குன்றியவர்களும், இருதயத்தில் பலமில்லாதவர்களும் கோழி முட்டையைச் சாப்பிடுகிறார்கள். இதிலுள்ள (Allumen) வெள்ளை மஸ்து மிகவும் புஷ்டியைத் தரக்கூடியது. இதில் வைட்டமின் A இருக்கிறது.

பால்தேகத்திற்கு மிகவும் அவசியம். அதுவும் குழந்தைகளுக்கு மிகவும் அவசியம். அதிலும் தேகப் பயிற்ச்சி செய்யும் ஒருவனுக்கு, ஒரு நாளைக்கு,குறைந்தது 2 படி பாலாவது வேண்டும். பாலை ரொட்டியுடனும், கோதியால் செய்த தோசையுடனும், சாப்பாட்டிலும் கலந்து சாப்பிடுவது, தேகத்திற்கு மிகவும் நல்லது. பசுவின் பாலைக் காட்டிலும், வெள்ளாட்டின் பால் தேகத்துக்கு மிகவும் நல்லது. தேகத்தில் போதுமான ஆரோக்யமும், புஷ்டியுமுள்ளவர்கள் தான் பசுவின் பாலை ஜீரணம் செய்ய முடியும். ஆகையால் குழந்தைகளுக்குப் பசுவின் பாலைக் கொடுக்க வேண்டுமானால், பாலுடன் கொஞ்சம், ஜலத்தையும், சர்க்கரையையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

பருப்பு, உளுந்து, பட்டாணி, கொள்ளு, நிலக்கடலை முதலியவைகள் சதைப்பற்றை உண்டாக்கும். கொள்ளை வேகவைத்தும் தின்பார்கள். அதிக வேலையின் காரணமாகக் களைப்படைந்த குதிரைகளுக்கும் கொள்ளைக் கொடுப்பார்கள். அது போலவே பட்டாணியும் தேகத்துக்கு மிகவும் நல்லது. இதையும் வேக வைத்துத் தின்பது மிகவும் அவசியம். இதில்தான் வைட்டமின் B. இருக்கிறது. வயிற்றுக் கடுப்பு, வயிற்று வலி, அஜீரணம், முதலிய வியாதிகளினால் கஷ்டப் படுகிறவர்கள் இதைச் சாப்பிடக்கூடாது.

கோதி, உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, தேங்காய், ராகி, கம்பு முதலியவைகள் தேகத்திற்கு பலத்தைத் தரும். முக்கியமாக வடமேற்கு மாகாணத்திலுள்ளவர்கள், கோதுமையை ஜாஸ்த்தியாகச் சாப்பிடுகிறார்கள். இதைக் கொண்டு ரொட்டியைத் தயாரிக்கிறார்கள். இந்த ரொட்டி மூன்றுவகைப்படும். முதலாவதாக (White bread) வெள்ளை ரொட்டி என்பது. இது கோதிமாவைக் கொண்டு செய்யப் பட்டது. இரண்டாவது (Wheaten Bread) கோதுமைத் தோலைக் கொண்டும், அந்த அறைபட்டது போக மீதியுள்ள குருணையைக் கொண்டும் தயாரிக்கப்பட்ட ரொட்டி. மூன்றாவதாக (**House hold Bread**) துணுக்குகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பதார்த்தங்கள் தேகத்திற்கு புஷ்டியைத் தருகிறது.

உருளைக் கிழங்கும் தேகத்திற்கு மிகவும் நல்லது. இதில் முக்கால் பாகம் ஜலமிருக்கிற தென்று முன்பு சொன்னேன். பின்னர் கொஞ்சம் கார்போஹைட்ரேட்டும், ப்ரொடீனும், கொழுப்பு மிருக்கிறது. இதை வேகவைத்தால், இதிலுள்ள சத்துக் கெட்டுப் போய்விடும். ஆகையால் இதை நெருப்பில் சுட்டு, ஆகாரத்துடன் கலந்து சாப்பிடுவது நலம். இதில் தான் வைட்டமின் C இருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட ஆகாராதிகளில், எது நமது தேகத்திற்கு மிகுந்த புஷ்டியைத் தருமென்றும், எது, அவ்வளவு புஷ்டியைத் தரக்கூடியதாயில்லை யென்றும் இப்போது தெரிந்து கொண்டோம். அடுத்த இதழில் இன்னும் பேசுவோம்.



# புத்தகப் பார்வை

## விஜயபால பவானி (2 பாகங்கள்)

[ஆசிரியர் Y. N. மாதவன், பிரசுராலயம்: 31, ஜெனரல் முத்தையா முதலி வீதி, ஜி. டி. மதராஸ். 2-பாகங்களும் சேர்ந்து விலை ரூ. 3-0-0]

உங்களுக்கு திடுக்கிடும் சம்பவங்கள் வேண்டுமா? மனதை மயக்கும் மர்மங்கள் வேண்டுமா? குலை நடுங்கும் கொலைகள் வேண்டுமா? சண்டமாருதச் சண்டைகள் வேண்டுமா? கருத்தைக் கவரும் காதல் வேண்டுமா? திடத்தைக் கொடுக்கும் தியாகம் வேண்டுமா?

உங்களுக்கு எது வேண்டுமானாலும், இந்த விஜயபால பவானியில் நீங்கள் அடையலாம். 'படிக்க எடுத்து விட்டால் முடிக்கும் வரை கீழே வைக்க மனம் வராது' என்று சொல்வது இந்த நவீனத்தின் விஷயத்தில் பொருத்தமாயிருக்கிறது. அவ்வளவு கவர்ச்சி பொருந்திய போக்கில் கதை எழுதப்பட்டிருக்கிறது.

சில நவீனங்களைக் கையிலெடுத்தால் நித்திராதேவி எங்கிருந்தோ வந்து நம்மீது ஆரோகணித்து விடுவாள். ஆனால் அன்றிரவு இதை நான் வாசிக்க ஆரம்பித்ததும், உள்ள தூக்கமும் ஓடிப்போய் விட்டது. புத்தகம் முழுவதையும் முடித்து விட்டுத்தான் தூங்கினேன்.

கதையின் நடை சிறிது கரடு முரடாக, அதாவது நாடகத் தமிழில் இருக்கிறது. வாழ்க்கையில் கலந்தியங்கும் எளிய நடையைக் கையாண்டிருந்தால் கதை இன்னும் சோபித்திருக்கும்.

அத்தியாயங்களின் முடிவுகள், அடுத்தது என்ன, என்று அறிவதில் ஆவலையும், உற்சாகத்தையும் உண்டாக்குகின்றன. ஆனால் கதையில் வரும் அநேக சம்பவங்கள் சற்றே இயற்கைக்கு முறணாக இருக்கின்றன.

கதை சரித்திரக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. கதையில் பல இடங்களில் வரும் சந்திப்பிழை, இலக்கணப் பிழைகள், கதாசிரியருக்கு பிரென்ச் லத்தீன், ஆங்கிலம், முதலிய பாஷைகளில் உள்ள அனுபவம் தமிழில் இல்லையென்று அவரே தம் முகவுரையில் சொல்வதை ஆமோதிப்பதுபோல் இருக்கின்றன. எனினும் இது இவருடைய முதல் முயற்சியின் சிருஷ்டியாயிருப்பதால், அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. இவருடைய அடுத்த வெளியீடுகளில் கொஞ்ச நஞ்சம் இருக்கும் குறைகளும் நீங்கிவிடலாம்.

இந்தக்கதை சினிமாவுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அதற்கென்றே எழுதப் பட்டது என்றே முகப்பில் அச்சிடப் பட்டிருக்கிறது. சில படமுதலாளிகள்கூட இதை சினிமாவுக்குள் பிடித்துப் போட முயற்சிப்பதாகத் தெரிகிறது.

மொத்தத்தில் 750 பக்கங்கள் நிறைந்த இந்த நவீனம் வெறும் காலப் போக்குக்கு மட்டுமின்றி, அறிவு வளர்ச்சிக்கும் சாதகமாக இருக்குமென்பதே என் அபிப்ராயம். இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துக் கதாசிரியரை மேலும் மேலும் ஊக்குவிப்பது அவசியம்.

G. R.

கீழ்க்கண்ட இடங்களில்

# பொது அறிவுப் போட்டிக் கூபன்கள்

ஸ்டாக் செய்யப்பட்டிருக்கின்றன.

வேண்டுவோர் இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

1. ஸிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98. A. வாலாஜா ரோடு, மவுண்ட்ரோடு, மதராஸ். (தர்பார் ஹோட்டல் சமீபம்)
2. சுகானந்தாஸ்டால், பெரியகடை வீதி, கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்ப கோன், 42. வடக்கு சித்திரவீதி, மதுரை.
4. எஸ். மாசிலாமணி பிள்ளை, தெப்பக்குளம். திருச்சி.
5. ஜி. வி. எம். சுந்தரம், நியூஸ் ஏஜண்டு, திருக்கோயிலூர்.
6. எஸ். சங்கர நாராயணன் செட்டியார், இம்பீரியல் சோடா பாக்டரி, மெயின் ரோடு, தென்காசி.
7. கே. ரெங்கசாமி முதலியார், நியூஸ் ஏஜண்டு, மெயின் ரோடு, மேட்டுப்பாளையம்.
8. எ. எஸ். சுப்பிரமணியம், கொரனாடு, மாயவரம்.
9. நியூஸ் அண்டு ஜெனரல் மார்ட், சேலம்.
10. டி. எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மானோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
11. வஸந்தா நியூஸ் ஏஜன்ஸி சௌராஷ்ட்ரபெட், பெங்களூர் சிட்டி.
12. கே. சுடலை முத்துப்பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, தூத்துக்குடி.
13. A. நாராயணசாமி அய்யர், ஈஸ்வரன் கோயில், மேலவீதி, [திண்டிவனம்.
14. மெய்வழிப் புத்தகசாலை, கல்லுக்கட்டி, காரைக்குடி.
15. என். ஏ. கெ. எஸ். மொய்தீன், நுவாரெலியா (சிலோன்.)
16. என். நடராஜ முதலியார், நியூஸ் ஏஜண்டு 50, வடக்கு ரதவீதி ஸ்ரீவில்லிபுத்தூர்.
17. கே. வேணுபிள்ளை, நியூஸ் ஏஜண்டு, திருநெல்வேலி ஜங்ஷன்.
18. விநயகம் அண்டு கம்பெனி, பெஸண்டு ரோடு, கும்பகோணம்.
19. D. A. சலீம், நியூஸ் ஏஜண்டு, தர்மபுரி.
20. K. சீனுவாசராவ், நியூஸ் ஏஜண்டு, திருத்துறைப்பூண்டி & [களப்பாள்.
